பதிவுஎண் 2041

தனிப்பிரதி விலை அணா ஒன்று.




| சந்தா விபரம். | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா. .... .... .... | 3—0 |
| 6 மாத சந்தா. .... .... .... | 1-12 |
| வெளிநாடுகளுக்கு வருட சந்தா | 4—0 |

ஆதி திராவிட சங்கங்களுக்கு பாதி சந்தாவுக்கு அனுப்பப்படும்.

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப் படமாட்டாது.

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளி வருவது.

| விளம்பர விகிதம். | ரூ. அ |
|---|---|
| கலம் ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு | 5—0 |
| சில்லரை விளம்பரம் அங்குலம் 1க்கு | 0—8 |


நீடித்த கால விளம்பரம் செய்வோருக்கும், பெரிய விளம்பரம் செய்வோருக்கும், பிரத்தியேக விகிதம்.

முன் பணமின்றி விளம்பரம் பிரசுரிக்கப் படமாட்டாது.

பிறப் பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையான்—குறள்.

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்—குறள்.

மாலை க | குரோதன-ஸு தை-மீ உரு-உ (7—2—26) ஞாயிற்றுக்கிழமை | மலர் சுல



மகாத்மா காந்திக்கு ஜே!

வந்தேமாதரம்! அல்லாஹு—அக்பர்!!

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்ப முடியாத வெளி நாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா.)

## காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்,
ஊத்துக்குளி. (S. I. R.)

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே. சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்குவிற்று வருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா.

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்

பல ரகம்வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்குவிற்றுவருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

## தென்னாட்டுக் கதர் பிரசாரம்

சென்ற மீ கடைசி வாரத்தில், ஸ்ரீமான்கள், ஈ. வெ. இராமசாமி நாயக்கரும் எஸ். இராமநாதனும், கதர் பிரசாரத்தின் பொருட்டு மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருவனந்தபுரம் முதலிய ஜில்லாக்களுக்குச் சென்று விட்டு இவ்வாரக்கடைசியில் வந்து சேர்ந்தார்கள். அதன் விபரமாவது:—மதுரையில் நூற்போர் சங்கத்தாரிடம் கலந்து, நூற்போர் சங்க நிர்வாக அதிகாரிகளின் மீட்டிங்கு கூட்டி நூற்போர் சங்க அபிவிருத்திக்கும், கதர அபிவிருத்திக்கும் உரிய தீர்மானங்கள் செய்யப்பட்டது. மாலையில் ஓர் பொது மீட்டிங்கு காங்கிரஸ்காரர்களால் கூட்டப்பட்டு, கடைசியில் அதைக்கவனிக்காமல் நூற்போர்சங்க நிர்வாக மீட்டிங்கிலேயே இருந்து விட்டபடியால், ஏராளமான ஜனங்கள் மீட்டிங்குக்கு வந்துவிட்டு, காங்கிரஸ் அதிகாரிகளின் பேரில் நிஷ்டூரப்பட்டுக்கொண்டும், பிராமணர்கள் சூழ்ச்சியினால், கூட்டப்பட்ட மீட்டிங்கைக்கூட கலைத்துவிட்டார்களென்றும் காங்கிரஸ்காரர்கள்பேரில் சந்தேகப்பட்டுக்கொண்டும் இரவு 8 மணி வரை காத்திருந்து விட்டுப் போய் விட்டார்கள். மதுரைக்காங்கிரஸ் நிர்வாகிகளும், தங்கள் அஜாக்கிரதையினால், ஊர் ஜனங்கள் தங்கள் பேரில் வருத்தப்படும்படி ஏற்பட்டுவிட்டதென்று வருந்தியும். மறுபடியும் ஓர் மீட்டிங்கு போடவேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். ஆனால் ஸ்ரீமான்கள், இராமநாதனும், நாயக்கரும் மறுமுறை வருவதாக வாக்களித்துவிட்டு, அங்குள்ள கதர் ஸ்தாபனங்களையும், சாய முறைகளையும் பார்த்துவிட்டு அடுத்த நாள் சாத்தூருக்குச் சென்று, அங்கு ஸ்ரீமான். சுப்பிரமணிய நாயனாரிடத்தில் கதர் போர்டு விஷயமாய் சில விஷயங்களைப் பற்றிக் கலந்துவிட்டு, அங்கு விடாத மழை பெய்ததினால், அன்றைய தினமே ராஜபாளையத்துக்குப் புறப்பட்டு விட்டார்கள். ராஜபாளையத்திலும் விடாமல் மழைபெய்து கொண்டிருந்ததினால், மழையிலேயே கதர் ஸ்தாபனங்களையும், பல ராட்டினங்களையும் தறிகளையும் பார்த்துவிட்டு, நூற்போர் சங்கத்துக்குச் சென்று, பல முக்கியஸ்தர்களிடையே, ராஜீய அபிப்பிராயங்கள் எப்படியிருந்தபோதிலும், கதரை அபிவிருத்தி செய்ய வேண்டியதை வற்புறுத்திவிட்டு மறுநாள் விருதுபட்டிக்குச் சென்றார்கள். விருதுபட்டியில் ஓர் கிளை டிப்போ ஏற்படுத்தும் விஷயமாய்த் தீர்மானித்து, அங்குள்ள ரத்னசாமி நாடார் வாசகசாலை நிர்வாகிகளைக் கண்டு 1000 ரூபாய் வசூல் செய்வதற்காய்ச் செய்திருக்கும் ஏற்பாட்டையும் கவனித்து விட்டு, அன்று மாலையில் வாசகசாலையின் சார்பாக பட்டிவீரன்பட்டி ஸ்ரீமான். சௌந்திரபாண்டிய நாடார் தலைமையின் கீழ் ஓர் பொதுக் கூட்டத்தில் கதர் முதலியவைகளைப் பற்றிப்பேசி, அடுத்த நாள் திருநெல்வேலிக்குச் சென்று திருநெல்வேலி காங்கிரஸ் கதர் டிப்போ விஷயமாய் வேண்டிய காரியங்களைக் கவனித்துவிட்டு டிப்போவைக் கதர் போர்டார் வசம் சுவாதீனம் செய்வதைப்பற்றிப் பேசுவதற்கு, ஸ்ரீமான்கள். எக்னேஸ்வரசர்மாவிடமும், மகாதேவ ஐயரிடம், கலந்து பேச கல்லிடைக்குறிச்சி முதலிய இடங்களுக்கு ஸ்ரீமான். இராமநாதனும், நாகர்கோவில் கதர் உற்பத்தியைப் பற்றியும், சுசீந்திரம் சத்தியாக்கிரகத்தைப் பற்றியும் கலந்து பேசுவதற்கு ஸ்ரீமான். இராமசாமி நாயக்கர் கோட்டாறுக்கும் புறப்பட்டு, சுசீந்திரத்தில் சத்தியாக்கிரகம் நடத்த வேண்டியதைப் பற்றியும், கதர், தீண்டாமை முதலியவைகளைப் பற்றியும் பொதுக்கூட்டம் கூட்டிப் பேசிவிட்டு, திருநெல்வேலிக்கு வந்து இருவருமாக மறுநாள், ஸ்ரீவைகுண்டத்துக்குப்போய், ஓர் வாசகசாலை வருஷக்கொண்டாட்டத்திற்கு, ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கர் தலைமைவகித்து, தேசபந்து தாஸர் உருவப்படத்தையும் திறந்து வைத்து, கதர், தீண்டாமை என்னும் விஷயத்தைப் பற்றிப் பேசிய பின், ஸ்ரீமான். இராமநாதன் கதரைப் பற்றியும் சில வார்த்தைகள் சொல்லி, அவ்வூரில் ஓர் கதர் கிளைஸ்தாபனம் ஏற்பட முயற்சி செய்வதாய்ப் பல கனவான்களிடம் சம்மதம் பெற்று, இருவருமாக திருநெல்வேலிக்கு வந்து, கிசையன்விளை சென்று, அங்கு கதர் உற்பத்தியையும், இராட்டினங்களையும், தறிகளையும் பார்த்துவிட்டு, நாங்குநேரி என்கிற வானுமாமலைக்கு வந்து கதரைப்பற்றியும், தீண்டாமையைப் பற்றியும் பொதுக்கூட்டம் கூட்டிப் பேசிவிட்டு, ஸ்ரீமான். என். எஸ். டி. சாரியார் அவர்கள் சகோதரரைக்கண்டு, வானுமாமலையில் ஓர் கதர்கிளை டிப்போவைக்க 1000 ரூபாய் சேகரிப்பதற்கு வாக்குத்தத்தமும் பெற்றுக்கொண்டு திருநெல்வேலிக்குவந்து, பேட்டைக்குச் சென்று, பேட்டை கதர் உற்பத்திக்காரர்களைக் கண்டு பேசி, அவர்களுக்குள்ள குறைகளையுமறிந்து, அவர்கள் வசமுள்ள கதர், நூல், இவைகள் சம்பந்தமான கணக்குகளையும் பார்த்துவிட்டு, பாளையங்கோட்டைக்குச் சென்று, பாளையங்கோட்டை நூல் நூற்கும் சங்கத்தையும் கணக்குகளையும்பார்வையிட்டு அன்று மாலையில் கோபால்சாமி கோயில் முன் கூட்டிய ஓர் பொதுக்கூட்டத்தில், இருவரும் பேசி விட்டு, மறுகாலையில் நேரே ஈரோட்டுக்குப் புறப்பட்டு வந்து விட்டார்கள்.

## ஆண்டுவிழா அழைப்பு

இம்மாதம் 6-ந் தேதியன்று, நாச்சியார்புரம், செந்தமிழ் வாசகசாலை ஆண்டுவிழா, மதுரை வக்கீல், ஸ்ரீமான். என். சோமசுந்தரபாரதியார் எம். ஏ. பி. எல். தலைமையில் நடைபெறுமென்றும், அவ்வமயம், காரைக்குடி, ஸ்ரீமான். ராய. சொக்கலிங்கன் முதலிய பலர் உபந்நியாசம் புரிவார்களென்றும் காரியதரிசி தெரிவிக்கிறார்.

## ஸ்ரீமான், சாரநாதனின் விவாகம்

இம்மாதம் 5-ந்தேதி காலை 7-மணிக்குப் பாலக்காட்டில் ஆரிய சமாஜத்தாரால் ஸ்ரீமான் சாரநாதனுக்கும். ஸ்ரீமதி. சகுந்தலா தேவிக்கும், ஆரியசமாஜக் கொள்கைப்படிக்கு சிறப்பாய் விவாகம் நடந்தேறியது. இவ்விவாகத்துக்கு வெளி இடங்களிலிருந்து ஸ்ரீமான்களான ஈ. வெ. ராமசாமி நாயக்கர், அவருடைய மனைவியார், என். லக்ஷ்மண முதலியார், அவருடைய மனைவியார் டி. எஸ். சுப்பிரமணியபாண்டே, சி. பி. சுப்பையா முதலியார், எம். வி. கருப்பண செட்டியார், வாஸு இன்னும் பல கனவான்களும், சீமாட்டிகளும் வந்திருந்ததோடு ஆரியசமாஜத்தைச் சேர்ந்த பலரும், பாலக்காடு கனவான்களாகிய திவான்பகதூர். எம். கிருஷ்ண நாயர், எம். எல். ஸி. ஸ்ரீமான்கள். சேஷய்யர், எம். எஸ். ராமய்யர், சப் இன்ஸ்பெக்டர், நம்பியார், முனிசிபல் டாக்டர், கல்பாத்தி சுப்பிரமணிய ஐயர், மற்றும் ஆரிய சமாஜத்தைச்சேர்ந்த பலநண்பர்களும் மற்றம் சில உள்ளூர் பிரமுகர்களும் விஜயம் செய்தார்கள். ஸ்ரீமான். ரிஷிராம் அவர்களால் கல்யாணச்சடங்கு நடத்திவைக்கப்பட்டது. கலியாணச் சடங்கின் மந்திரத்தை ஸ்ரீமான். பாண்டேயால் மொழி பெயர்த்துச்சொல்லப்பட்டது. கலியாண முடிவில் ஸ்ரீமான். இராமசாமி நாயக்கர், கலியாணத்துக்கு வர சவுகரியப்படாத பல கனவான்களிடமிருந்து அதாவது வயி. சு. ஷண்முகம் செட்டியார், ஆர்.கே. ஷண்முகம் செட்டியார், என். எஸ். இராமசாமி ஐயர், எஸ். இராமநாதன், குப்புசாமி பிள்ளை, "ஊழியன்" பத்திராதிபர், "குமரன்" பத்திராதிபர், வி. ஏ. [illegible], மற்றும் பல கனவான்களிடமிருந்தும் ஆசி கூறி தந்திகளும், கடிதங்களும் வந்ததைப் படித்துக் காட்டி, வந்திருந்த கனவான்களுக்கு வந்தனம் கூறினார்.

## கல்பாத்தி சத்தியாக்கிரகம்.

அன்றுமாலையில் ஓர் பொதுக்கூட்டம் நேஷனல் ஹைஸ்கூல் காலியிடத்தில் கூட்டப்பட்டு, ஸ்ரீமான்கள். ஈ. வெ. இராமசாமி நாயக்கரும், பாண்டேயும் கதர், தீண்டாமை, கல்பாத்தி அக்கிராரம், சுசீந்திரம் சத்தியாக்கிரகம் முதலியவைகளைப் பற்றி நெடுநேரம் பேசினார்கள். முடிவில் கல்பாத்தியில் சத்தியாக்கிரகம் செய்வதுபற்றி பாலக்காட்டில் சில முக்கிய கனவான்களுடன் பேசிவிட்டு, சீக்கிரத்தில் பாலக்காட்டுக்கு வந்து சத்தியாக்கிரகம் தொடங்கலாமென்பதைப் பற்றி யோசிக்க ஓர் நாளைக் குறிப்பிட்டுக்கொண்டு ஊருக்குத் திரும்பிவிட்டார்கள்.

## பார்க்கவர் மகா நாடு.

மாகாண பார்க்கவ பன்னிரெண்டாவது மகாநாடு கும்பகோணத்தில் அக்ஷய ஆண்டு சித்திரைத்திங்கள் நடைபெறும். இனிச்செய்யவேண்டிய ஆக்க வேலைத்திட்டங்களைக் குறித்து ஆலோசிப்பான் வேண்டியே இம்மகாநாடு விசேஷமாகக்கூட்டப் பெறுகிறது. ஆகவே குலாபிமான அன்பர்கள் அனைவரும் போந்து கலந்து கொள்ளுவது அவசியத்திலும் அவசியமாகும். குல முன்னேற்றத்தில் ஆர்வங்கொண்ட அபிமானிகள் எனது விலாசத்திற்கேனும், திருவாளர். சா. முத்துக்குமார உடையார் அவர்கள், பார்க்கவர் மஹாநாட்டு உபசாரணைச் சபைக்காரியதரிசி, வில்லியராயநல்லூர், கும்பகோணம் என்ற விலாசத்திற்கேனும் உடனே எழுதி விபரமறிந்துகொள்ளலாம். தேதி விரைவில் பத்திரிக்கைகள் மூலம் அறிவிப்போம்

திருச்சி, தஞ்சை, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, மதுரை, இராமநாதபுரம், சேலம் முதலிய ஜில்லாக்களில் உள்ள தாலூக்காக்களுக்கு நந்தமன்னர், மலையமன்னர், சுருதிமன்னர், ஆயபார்க்கவகுல மகா ஜனங்கள் நிரம்பியுள்ள கிராமங்கட்கு மாசி மாதத்தில் சீமான்களான பார்க்கவபந்து ம. ரா. குமாரசாமி, சா. முத்துக்குமார உடையார் ஆகியவர்களும் அடியேனும் சுற்றுப்பிரயாணம் செய்வதாய எண்ணியுள்ளோம், விபரம் பின்னர் வெளியிடுகின்றோம். தங்களன்பன்,

மே. வே. துரைசாமி

— செய்திகள் ஆசிரியர்

## பிராமணப்பத்திரிக்கைகளும் அதன் பிரசாரங்களும்.

அடுத்துவரும் சட்டசபை தேர்தல்களில் பிராமணரல்லாதார் முன்னேற்றத்தில் கவலையுள்ள எந்த பிராமணரல்லாதாரும் ஜெயம் பெற முடியாதபடி விஷமப் பிரசாரங்கள் செய்து பிராமணர்களும்—அவர்கள் தாளத்திற்குத் தகுந்தபடி ஆடும்படியான பிராமணரல்லாதார்களையுமே சட்டசபையைக் கைப்பற்றும்படியான மாதிரிக்கு வேலைகள் செய்யப்பட்டு வருகிறதைப் பிராமணரல்லாத பாமர ஜனங்கள் இன்னமும் அறியாமல் ஏமாந்து போய்க்கொண்டே இருக்கிறார்கள். இதற்கனுகூலமாகவே சில பிராமணரல்லாத பத்திரிக்கைகளும்; தலைவர் என்போர்களும், தொண்டர்கள் என்போர்களும் ஒத்துப்பாடிக்கொண்டே வருகிறார்கள். ஆனாலும், இப்பத்திரிக்கைகளும், தலைவர்களும், தொண்டர்களும் தற்காலம் செல்வாக்கும், பெருமையும், ஜீவனோபாய மார்க்கமும் அடைந்திருந்தபோதிலும், தேர்தல்கள் முடிந்து பிராமணர்கள் காரியம் முடிந்தவுடனே காதருந்த ஊசிபோல் கருதப்படுவார்கள் என்பதில் யாதொரு சந்தேகமும் இருக்காது.

ஆனாலும், இப்பொழுது ஏன் பிராமணர்களும் அவர்கள் பத்திரிக்கைகளும் அதிகமான பிரயத்தனங்கள் எடுத்துக்கொண்டு, இவ்வளவு பணங்கள் செலவு செய்து பிரசாரங்கள் செய்கிறார்கள் என்கிற விஷயத்தில்; சிலருக்கு அதன் அவசியம் விளங்காமலேயிருக்கிறது. இப்பிரசாரங்களின் முக்கிய காரணம் அடுத்தாற்போல் ஏதோ சில ராஜீய சீர்திருத்தங்கள் என்பது ஏற்படப்போகிறது என்பது பிராமணர்களின் கவலையாயிருக்கிறது. அச்சீர்திருத்தங்களுக்காகசென்ற 1920ம் வருடத்திய சீர்திருத்தங்கள் வழங்கவேண்டி அரசாங்கத்தார், ஒரு விசாரணை கமிட்டி ஏற்படுத்தியதுபோல், இப்பொழுதும் ஒரு விசாரணைக் கமிட்டி ஏற்படுத்துவார்கள். அக்கமிட்டி ஏறக்குறைய 1927-விலோ அல்லது 1928-ம் வருடத்திலோ அமுலுக்கு வந்து ஆங்காங்கு சென்று விசாரணைகள் செய்யத் தொடங்கும். அவ்விசாரணையில் பிராமணரல்லாதார் தங்கள் நிலைமையையும், தேவைகளையும் உள்ளபடி ஒற்றுமையாய்ச் சொல்லிவிட்டால், அது பிராமணர்களுக்கு பெரிய ஆபத்தாய் முடிந்துவிடும், என்கிற பயம் வைத்து 1920-ம் வருடத்திய சீர்திருத்த விசாரணையின்போது ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமாய் சென்னை மாகாண சங்கம் என்று ஒன்றை ஸ்தாபித்து அதற்குப் பத்திரிக்கைகளையும் ஸ்தாபித்து பிரசாரங்களுக்கு ஆள்களை ஏற்படுத்தி அதற்கு பணங்கள் உதவி சூழ்ச்சிகள் செய்து, ஜஸ்டிஸ் கட்சியின் அபிப்பிராயம் நிறைவேற்றவொட்டாமல் செய்ததுபோல், இப்பொழுதும் பிராமணரல்லாதாரில் சிலரையும் சில பத்திரிக்கைகளையும் சுவாதீனம் செய்து பிராமணரல்லாதரின் தேவைக்கு விரோதமாய்ப் பிரசாரம் செய்விக்கவேண்டியது தங்கள் அவசியமாய்ப்போய் விட்டது.

ஆனால், 1920-ம் வருஷத்திய சீர்திருத்தத்தில் பிராமணரல்லாதாரை ஏமாற்றி சரிசெய்து கொள்ள ஸ்ரீமான். சி. பி. ராமசாமி அய்யர் செலவுக்குப் பணம் முதலியவைகளும், பிரசார ஏற்பாடு சிரமம் முதலியவைகளும் செய்யும் வேலையை ஏற்றுக்கொண்டிருந்தார்.

இப்போது, 1930-ம்வருடத்திய சீர்திருத்தத்திற்கு பிராமணரல்லாதாரை வஞ்சிக்க செலவுக்குப் பணமும் பிரசார ஏற்பாடும் ஸ்ரீமான். எஸ். சீனிவாசய்யங்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

பிராமணரல்லாதார்களில் அப்பொழுது யார் யாரை தங்கள் வசப்படுத்திக்கொண்டார்களோ, அதுபோலவே இப்பொழுதும் ஏறக்குறைய அதே ஆட்களே அவர்கள் வசப்பட்டிருக்கின்றனர். அவைகளின் ரகசியத்தையும் சிலர் கோப மயக்கத்தில் வெளியிட்டிருப்பதையும் கூட கவனித்திருக்கலாம். அதாவது ஜஸ்டிஸ் கட்சியை ஒடுக்க (பாமர ஜனங்களை ஏமாற்ற)த்தான் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்கப்பட்டது என்று சொல்லியிருப்பதை கவனித்தால், நன்றாய் விளங்கும். சென்ற "சீர்திருத்த" விசாரணையின் போதே சென்னை மாகாணச்சங்கம் என்னும் ஒரு துரோகச்சங்கம் தோன்றியிருந்திராதிருக்குமாயின், பிராமணரல்லாதார் தங்கள் சமூக நன்மைக்காக எதிர்பார்த்த நன்மைகள் ஏறக்குறைய அடைந்தே இருக்கக்கூடும். இப்பொழுதாவது அதை அடைய மார்க்கமில்லாமல் பிராமணரல்லாத மக்களையே சுவாதீனப்படுத்திக்கொண்டு கொடுமை செய்வதோடு தங்கள் பத்திரிக்கைகளிலும், இதையே முக்கியகொள்கையாக வைத்துப்பாடுபடுகின்றன. இவற்றை பிராமணரல்லாத பாமர ஜனங்கள் நம்பி மோசம் போகிறார்கள்.

அதாவது, நாம் வெளியிடங்களுக்கு பல காரியமாய்ச் சென்ற சந்தர்ப்பங்களில் சந்திக்க நேர்ந்த சில பிராமணரல்லாத சகோதரர்கள் நம்மிடம் வந்து மிகுந்த பரிதாபப்படுவதை நேரில் பார்த்தோம்.

எப்படியெனில், நம்மைப்பார்த்து" ஐயா தங்களைத்தானே தமிழ்நாட்டு உண்மையான தேசபக்தர் என்று எண்ணியிருந்தோம், தாங்களே இப்போது ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்துவிட்டீர்களே, எங்களை இப்படிக் கைவிட்டு விடலாமா? தாங்களே இப்படிச்செய்தால் போலி தேசபக்தர்களைப்பற்றி சொல்லவும் வேண்டுமா? இனி நாங்கள் யாரை நம்புவது" என்று கவலைப்பட்டார்கள்.

நான் ஜஸ்டிஸ் கட்சியை சேர்ந்ததாய் தாங்கள் எப்படி உணர்ந்தீர்கள் என்றுகேட்டால் "சுயராஜ்யா" "சுதேசமித்திரன்" பத்திரிக்கைகளின் மூலமாய் அறிந்தோம் என்று சொல்லுகிறார்கள்.

சரி, நான் ஜஸ்டிஸ் கட்சியில்சேர்ந்தேனோ இல்லையோ அதைப்பற்றி அப்புறம்பேசிக்கொள்ளலாம்; ஜஸ்டிஸ்கட்சி என்றால் என்ன அவ்வளவு பாவமான கட்சியாய் போய்விட்டது என்று கேட்டால்,

1. அக்கட்சிக்குக் கதரில் நம்பிக்கையில்லை.

2. உத்தியோக ஆசை.

3. ஜெயிலுக்குபோன தேசபக்தர்களுக்கு சவுகரியம் செய்யக்கூடாது என்று அதன் தலைவர் ஸர். செட்டியார் சொன்னார்.

4. தஞ்சாவூர் ஜில்லா விவசாயிகளுக்கு நிலத்தீர்வை உயர்த்தக்கூடாது என்று சட்டசபையில் வாதாடியபோது ஜஸ்டிஸ் கட்சியார் அதை ஆதரிக்காமல் எதிரிடையாய் ஓட்டுக் கொடுத்தார்கள்.

ஆகிய இக்காரியங்களை நாங்கள் மிகவும் முக்கியமானதாய் கருதுகிறோம். ஆதலால் இம்மாதிரிக் கட்சியை தாங்கள் ஆதரிக்கலாமா என்று கேட்கிறார்கள். இது போலத்தான் மற்றும் பாமர ஜனங்கள் நினைத்திருப்பார்கள், என்பதும் ஸ்ரீமான். ஸ்ரீனிவாசய்யங்காரிடம் பணம் வாங்கிக்கொண்டு பிரசாரம் செய்யும் பிராமணரல்லாத தொண்டர்களும் இதைத்தான் சொல்லிப்பிரசாரம் செய்துவருகிறார்கள் என்பதும் நமக்கு இதிலிருந்து நன்றாய் விளங்கிற்று.

1வது ஜஸ்டிஸ் கட்சிக்குக்கதரில் நம்பிக்கையில்லை என்பது ஒரு முக்கியமான குறைவுதான். தற்காலம் இந்தியாவிலுள்ள எந்தக் கட்சிக்குக் கதரில் நம்பிக்கையிருக்கிறது? மிதவாதக் கட்சிக்கு நம்பிக்கையிருக்கிறதா? சுயேச்சைக் கட்சிக்கு நம்பிக்கையிருக்கிறதா? பெசண்டு கட்சிக்கு நம்பிக்கை இருக்கிறதா? சுயராஜ்யக் கட்சிக்கு நம்பிக்கை யிருக்கிறதா? அல்லது காங்கிரஸ் கட்சிக்காவது நம்பிக்கை இருக்கிறதா? நூற்போர் சங்கத்தில் இந்தியா ஓட்டுக்கும் மெம்பர்களாயிருக்கிற சுமார் 3000 பேரைத்தவிர மற்ற ராஜீயவாதிகளுக்குக் கதரில் நம்பிக்கையில்லை என்றே சொல்லவேண்டும். நம்பிக்கை இருந்திருக்குமேயானால், அவரவர்கள் ராஜீய திட்டத்தில் கதர் முதன்மையான ஸ்தானம் பெற்றிருக்கும்; அல்லாமலும், சுயராஜ்யக்கட்சிக்குக்கதரில் நம்பிக்கையில்லாத காரணத்தாலேயே, காங்கிரசைவிட்டு கதரை வெளியேற்றவேண்டியதாயிற்று என்பதில் சந்தேகமுண்டா? அப்படியிருக்க சுயராஜ்யக்கட்சியை ஆதரிப்பவர்களைப்பற்றி கவலை கொள்ளாமல் ஜஸ்டிஸ் கட்சியைப்பற்றி மாத்திரம் ஏன் இவ்வளவு ஆத்திரப்படவேண்டும்?

2-வது உத்தியோக ஆசை என்பது. உத்தியோக ஆசை நமது நாட்டில் எந்தக்கட்சிக்கு இல்லை. மேல்கண்ட பல கக்ஷிகள் உத்தியோகம் வகிக்கிறதா? இல்லையா? சுயராஜ்யக் கக்ஷியாரும் உத்தியோகம் வகிக்கிறார்களா? இல்லையா? அவர்களும் சர்க்காரிடம் 4000, 5000 சம்பளம் வாங்கி வருகிறார்களா? யில்லையா? இதைப்பற்றி அவர்களுக்கு சாதகமான பத்திரிக்கைகளாகிய "நவசக்தி" "தமிழ் நாடு" ஆகிய பத்திரிக்கைகளே ஸ்ரீமான்கள் பட்டேல், நேரு ரங்கசாமி ஐயங்கார், முதலியோர்கள் பார்க்கும் வேலைக்கும், தம்பே முதலியவர்கள் பார்க்கும் வேலைக்கும் வித்தியாசமில்லை என்று எழுதியதைக் கவனித்தால் விளங்காதா? சில மாகாணங்களில் முக்கியமாய்த் தமிழ்நாட்டில் சுயராஜ்யக் கக்ஷியாருக்கு உத்தியோகம் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறபடியால், சீ-அந்தப்பழம் புளிக்கும் என்று ஏமாற்றி ஓட்டு வாங்கப்பார்க்கிறார்கள். கிடைக்கும்போலிருந்தால், உடனே பெற்றுக் கொள்ளுவார்கள் காங்கிரஸ் செக்ரட்டேரியான ஸ்ரீமான். A. ரங்கசாமி ஐயங்காரும், சுயராஜ்யக்கக்ஷி செக்ரட்டேரியான ஸ்ரீமான். T. ஆதிநாராயண செட்டியாரும், தம் மக்களுக்கு நூற்றுக்கணக்கான சம்பளம் பெறத்தக்க உத்தியோகம் சம்பாதித்துக்கொடுத்திருக்கிறார்களா? இல்லையா? அன்றியும் தங்கள் திட்டத்திலாவது உத்தியோகம் கூடாது என்று ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்களா? அதில் சமயம்போல் பார்த்துக்கொள்ளலாம் என்று தானே எழுதி வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

3-வது ஜயிலுக்கு போனவர்களுக்குச்சவுகரியம் செய்யக்கூடாது என்று சர்-செட்டியார் சொன்னது.

இந்த வார்த்தைதான் சிலருக்குப் பெரிய ஆதாரமாயிருக்கிறது. இதை வைத்துக்கொண்டுதான் ஸ்ரீமான். பாஷ்யம் ஐயங்காரும், ஸ்ரீமான். சத்தியமூர்த்தியும், அவர்கள் நண்பர், ஜனாப் ஷாபி முகம்மதும், தியாகராய செட்டியார் தமிழ்நாட்டு டயர் என்று சொன்னார்கள்.

இன்னமும் அதையே சில வயிற்றுச்சோற்று தேசபக்தர்களும் சொல்லிக்கொண்டு பிராமணர்களுக்கு ஓட்டு வாங்கி கொடுக்கிறார்கள்.

சர்-செட்டியார் சொன்னதை உண்மையென்றே வைத்துக்கொள்ளுவோம். ஏன் அப்படிச் சொன்னார்? எதற்காக அப்படிச்சொன்னார்? என்பதைக் கவனிக்கவேண்டாமா? அவருக்கு, ஜெயிலுக்குப்போய் அவஸ்தைப்பட்ட ஸ்ரீமான்கள். வரதராஜலுநாயுடு, எஸ். ராமநாதன், ஈ. வெ. ராமசாமி நாயக்கர், அவர் மைத்துனனாகிய தேவ நாயக்கர் முதலானவர்களிடம் சர்-செட்டியாருக்கு விரோதமோ, குரோதமோ, சுயராஜ்யம் வந்துவிடுமோ என்னமோ என்கிற பயமா? இப்படிச் சொல்லி தான் ஏதாவது பணமோ உத்தியோகமோ சம்பாதித்துக்கொள்ளலாம் என்கிற சுயநலமா என்பதைக்கவனிக்கவேண்டாமா?

முதலாவது சர். செட்டியார் ஒத்துழையாமை தத்துவம் ஒழுங்காய் நடைபெறும் என்கிற நம்பிக்கை யில்லாதவர். ஒத்துழையாமை தத்துவத்தில் பிராமணரல்லாதார் ஈடுபட்டு உழைப்பதில் அதன் பயனை பிராமணர்கள் அடைவார்கள் என்கிற தீர்க்கதரிசனமுள்ளவர். அல்லாமலும் ஒத்துழையாமையின் போல் பிராமணரல்லாதாரில் சில பொருக்குமணிகள் தங்கள் முன்னேற்றத்தை கெடுத்துக்கொள்ளுகிறார்களே

என்கிற விசனமுடையவர். இவ்வித குணமுள்ள ஒருவர் மக்கள் ஜெயிலுக்கு போவதை எப்படி ஆதரிக்கக்கூடும்? அதோடு, அவர்களுக்கு வேண்டிய சவுகரியங்களைச் செய்துகொடுக்க எப்படி மனம் வரும்? ஜெயிலுக்குப் போகிறவர்களுக்கு சவுகரியம் செய்து கொடுப்பதாயிருந்தால், வெளியில் கஞ்சிக்கில்லாமல் திரிகிற ஏழைமக்கள் எல்லோரும் தான் ஜெயிலுக்குப் போய் விடுவார்கள். அல்லாமலும், ஜெயிலுக்குப் போவது தப்பு என்று நினைக்கிறவர், இன்னும் அநேகம் பேருக்கு ஜெயில் ஆசை உண்டாகும்படியாக சவுகரியங்கள் செய்து கொடுக்க எப்படி சம்மதிப்பார்? இதை யோசிக்கவேண்டாமா? இது ஒருபுறம் இருந்தாலும், சுயராஜ்யக்கட்சித்தலைவரான காலம்சென்ற தேசபந்து தாஸை, ஒரு சமயத்தில் பார்த்து, "ஜெயிலுக்குப்போயிருக்கும் தேசபக்தர்களைக் கவனிக்காமல் சட்டசபைக்குப்போக ஆசைப்படுவதின் மூலம் சர்க்காருக்கு உதவி செய்கிறீர்களே" என்று கேட்டதற்கு, "ஜெயிலுக்குப்போனவர்களைப்பற்றிக் கவலையில்லை; வெளியில் வயிறு வளர்க்க யோக்கியதை இல்லாத-கஞ்சிக்கு வகையற்றவர்களேதான் போயிருக்கிறார்கள்" என்று சொன்னார். அது மாத்திரம் குற்றமில்லையா? அப்பேர்ப்பட்டவர்களின் பெயரைச்சொல்லிக்கொண்டுகூட நம் நாட்டு பிராமணர்கள் பிழைக்கவில்லையா? சர். செட்டியார் சொன்னது மோசமானதா? தேசபந்து தாஸ் சொன்னது மோசமானதா? இதைப்பற்றி யோசிக்கவேண்டாமா?

அன்றியும் "தமிழ்நாட்டுத் தலைவர்," அநேக தேசபக்தர்களுக்கு தன் வகுப்புநலத்திற்காக கஞ்சிவார்க்கும் தர்மப்பிரபு ஸ்ரீமான். கலியாணசுந்தரமுதலியார் வாயாலேயே, ஒரு ஒப்பற்ற தலைவர் என்று சொல்லப்படும் பெரியாரான ஸ்ரீமான். எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார் ஒத்துழையாமை அன்கான்ஸ்டிடியூஷனல்—சட்ட விரோதமானது; ஆதலால் காங்கிரஸ் ஸ்தாபனங்களையெல்லாம் சட்டவிரோதமான கூட்டமாகத் தீர்மானித்து காங்கிரஸ் மெம்பர்களையெல்லாம் மகாத்மா உள்பட ஜெயிலில் அடைத்து ஒத்துழையாமையையே ஒழித்துவிட வேண்டுமென்று சொன்னாரே! இது குற்றமில்லையா? இவரை இன்றையத்தினம் தமிழ்நாடு தலைவராகக் கொள்ளவில்லையா? இவர் சொன்னது மோசமானதா? சர். செட்டியார் சொன்னது மோசமானதா? அப்பேர்ப்பட்ட சர்.செட்டியாரை, ஸ்ரீமான், அய்யங்கார் தனக்கு மந்திரி பதவிவேண்டும்; என்று கேட்டதைவிட சர் செட்டியார் சொன்னது மோசமானதா?

4—வது தஞ்சை ஜில்லா நிலத்தீர்வையைக்குறைப்பதற்கு ஜஸ்டிஸ் கட்சியார்விரோதமாயிருந்ததாகச் சொல்லுவது.

இதைப் பாமர ஜனங்கள் சரியானபடி உணருவதற்கே மார்க்கமில்லால் விஷமப் பிரசாரம் நடப்பதால் ஏமாந்து போக நேரிடுகிறதேயன்றி, இதில் ஜஸ்டிஸ் கட்சியார் குற்றமென்ன என்பதே விளங்கவில்லை. முதலாவது தஞ்சை நிலத்தீர்வை விஷயம் கட்சியைச் சேர்ந்ததே அல்ல; ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்கள் சிலபேர் வரி உயர்த்தக்கூடாது என்பதற்கே ஓட்டுக் கொடுத்தார்கள்.—

ஜஸ்டிஸ் கட்சி அல்லாத மெம்பர்கள் பலபேர் வரி உயர்த்த வேண்டும் என்பதற்கே ஓட்டுக்கொடுத்தார்கள்.

ஏனெனில் வரி உயர்த்தினது தஞ்சை ஜில்லாவுக்கு மாத்திரம் அல்ல; 30 வருடத்திற்கு ஒருதரம் ரீசெட்டில்மெண்டு என்கிற சர்க்கார் சட்டப்படி ஒவ்வொரு ஜில்லாவையும் 30 வருஷத்திற்கு ஒரு தரம் அளந்து சர்வே செய்து ரூபாய்க்கு இவ்வளவு அதிகப்படுத்துவது என்கிற முறைப்படி, அநேக ஜில்லாக்களை அளந்து சர்வே செய்து, வரி அதிகப்படுத்திவிட்டு, தஞ்சை ஜில்லாவுக்கு வந்து அளந்து வரி போடும்போது தஞ்சை ஜில்லாக்காரர் ஆக்ஷேபித்தால், எப்படி ஒப்புக்கொள்ளக் கூடும்? உதாரணமாக, ஒரு முனிசிபாலிட்டியில் 5 வருடத்திற்கு ஒருதரம் கவனித்து வரி போடுகிறது என்கிற சட்டப்படி கவனித்து வரி போடும் முறை துவக்கப்பட்டு 20 வீதிகளுக்கு வரி உயர்த்திப்போட்டுவிட்டு, 21 வது வீதிக்கு வரிபோடவரும் போது, தங்கள் வீதிக்கு மாத்திரம் வரி உயர்த்தக்கூடாது என்று அவ்வீதிக்காரர் போரால், அவ்வீதிக் கவுன்சிலர்கள் வாதாடினால் மற்ற கவுன்சிலர்கள் ஒப்புக்கொள்ளுவார்களா? ஒரு சமயம் அறியாமையினால் ஒப்புக்கொண்டாலும், சர்க்கார் சம்மதிப்பார்களா? அது போலவே, மற்ற ஜில்லாக்களுக்குப்போட்டு அமுலில் வருவதை தஞ்சை ஜில்லாவில் மாத்திரம் எப்படி இல்லாமல் செய்ய முடியும்? தஞ்சை ஜில்லாவில் பிராமண மிராசுதாரர் அதிகமாயிருப்பதால், தஞ்சைக்கு மாத்திரம் ஒரு சட்டம்; மற்ற ஜில்லாவுக்கு வேறு சட்டமா? வேறுபல ஜில்லாக்களைச் சேர்ந்த தேசிய மெம்பர்கள்கூட இத்தீர்மானத்தை எதிர்த்திருக்கிறார்கள். அப்படியிருக்க இது எப்படி ஜஸ்டிஸ் கக்ஷியின்மீது குற்றமாகும் என்பதைப் பாமரஜனங்கள் அறிவதில்லை. அல்லாமலும் இதற்காகவரிகொடா இயக்கம் என்று ஒரு பித்தலாட்ட இயக்கம் கூட தஞ்சை ஜில்லாக்காரர் ஆரம்பித்தார்கள். இதைக்கூட காங்கிரசில் முக்கியஸ்தர்-இப்போது பிராமணர்களால் பெரிதும் கொண்டாடப்படுபவரான ஸ்ரீமான். திரு. வி. கல்யாணசுந்தர முதலியார், தஞ்சையில் நடக்கும் வரிகொடா இயக்கம் சுத்தப்பொய்யான இயக்கமென்றும், பத்திரிக்கை இயக்கமென்றும் கூடச் சொன்னார். அதைப்பற்றி பேசுவோர் யாரையும் காணோம். இப்போது அவரை பிராமணர்கள் லோககுருவுக்கு அடுத்தபடியில் கொண்டாடுகிறார்கள்.

தங்கள் நன்மைக்கு கொஞ்சம் விரோதமாய் யாராவது பேசினால் மாரீசன் என்று சொல்லிவிடுகிறார்கள்; தங்கள் நன்மைக்குஅனுகூலமாய் தங்கள் தாளத்திற்கு ஏற்றப்போல் ஆடினால், மகாசத்திய கீர்த்தி, உத்தமர் என்று சொல்லி விடுகிறார்கள். ஆகிய இம்மாதிரி பிரசாரங்களால், நமது ஜனங்கள் அடியோடு ஏமாந்து போய் பரிதவிக்கிறார்கள், என்பது நிதர்சனமாயிருக்கிறது. ஆதலால்; பிராமணரல்லாதார் ஏதாவது முற்போக்கடையவேண்டுமானால், சுயமரியாதையோடு வாழவேண்டுமானால், தங்கள் சமூகத்து பாமர ஜனங்கள் உண்மையை அறியும்படியும், பிராமணப்பிரசாரத்தால் ஏமாந்து சமூகத் துரோகிகள் ஆகாதபடியும், செய்யத்தகுந்த பிரசாரங்கள் நடைபெறவேண்டும். ஜஸ்டிஸ் கட்சியின் உண்மையை பொது ஜனங்கள் அறியும்படியும், பொது ஜனங்களுக்கு அக்கட்சியில் உண்மையாய் என்ன குறை இருக்கிறது என்பது உணர்ந்து, ஏதாவது இருந்தால் அதைத் திருத்த வசதியு உண்டாகும்படியும், வேண்டிய ஏற்பாடுகள் பிராமணரல்லாதார் வகுப்பில் அக்கரை உள்ளவர்கள் உடனே செய்யவேண்டியது மிகவும் அவசியம் என்பதையும், இது சமயம் ஏமாந்துபோய் விட்டோமானால் பிறகு, அய்யோ என்றாலும் வாராது, அம்மா என்றாலும் வாராதுஎன்பதையும் உணரக்கோருகிறோம்.

---

# திரு. முதலியார்.

இதுகாறும் திரை மறைவிலிருந்து ஒப்பாரி வைத்த திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் இப்பொழுது வெட்ட வெளிச்சத்தில் வந்து விட்டார்கள். சென்னைக் கடற்கரையில் சமீபத்தில் கூடிய ஒரு கூட்டத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்கு எதிர்ப்பிரசாரம் செய்யப்போவதாக விளம்பரம் செய்து விட்டார். முதலியாரவர்களின் இவ்வுறுதி நிலையை மிகப் பாராட்டுகின்றோம். நெருக்கடியான சமயங்களில் 'வழ வழ' பாடுவதே திரு. முதலியாரவர்கள் இயல்பு. அந்நிலை மாறி தன் அபிப்பிராயத்தை முதலியாரவர்கள் ஒரு வழிப்படுத்தியது போற்றத்தக்கதே. ஆனால் இந்நிலையைக் காஞ்சி மகாநாட்டின்போது கொண்டிருக்கலாகாதா? உண்மையாகவே வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தில் முதலியாரவர்களுக்கு நம்பிக்கையில்லாதிருந்திருந்தால், திரு. நாயக்கரவர்களின் தீர்மானத்தை மகாநாட்டில் பிரேரபனை செய்ய அனுமதி கொடுத்து, தன் முழுபலத்தோடு அதை எதிர்த்திருக்கலாம். 'வீரம் வீரம்' என்னும் மொழிகளை, தன் அக்கிராசனப்பிரசங்கம் முழுதும் அடுக்கிவைத்த திரு – முதலியாரவர்களுக்கு அவ் "வீரம்" இல்லாது போயிற்று! குறுக்குவழியிலிறங்கி தன் குலத்துக்கு வினைதேடி, தமிழுலகத்தில் தான் பெற்றிருந்த மதிப்பையும் ஹோமஞ் செய்துவிட்டார்கள். இப்பொழுது முதலியாரவர்கள்கூடப் பக்கமேளம்போடும் பார்ப்பனக் கூட்டத்தார் எதிர்பார்த்ததும் இதுவே டாக்டர் நாயுடு, திரு. முதலியார் திரு, நாயக்கர் ஆகிய மூவருக்கும் தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கும் மதிப்பைக்குறைக்க அன்னோர் வெகுநாளாக முயற்சி செய்து வருவதை தமிழுலகம் அறியாதா? அவர்கள் விரும்பியவண்ணமே திரு. முதலியாரவர்கள் காஞ்சியில் பலியானார்கள். பாக்கியிருவரையும் படுகுழியில் வீழ்த்த அவர்கள் தருணம் நோக்கியிருக்கிறார்கள்; திண்ணைப் பிரசாரமும் செய்கிறார்கள். அவ்விருவர் விதியும் எப்படியோ? ஈசனே அறிவன்.

பிராமணரல்லாதார் பலர் நீங்கி நிற்கும்போது "ஜஸ்டிஸ்" இயக்கம் எவ்வாறு பிராமணரல்லாதார் இயக்கம் ஆகும் என்கிறார் நமது அண்ணா முதலியார். தற்கால காங்கிரஸ் தலைவர்கள் சிறு தெருருட்டி விளையாடிய காலத்திலேயே காங்கிரஸ் வீரர்களாய் விளங்கிய திரு. விபினசந்திரபாலர், சுரேந்திரநாத் பானர்ஜி, ஆகிய தாராளக் கட்சியாரும், திரு. கெல்கர், ஜெயகர் ஆகிய சுயேச்சைக் கட்சியாரும், ஜஸ்டிஸ் கட்சியாரும் சேராத காங்கிரஸ் எவ்வாறு "நாஷனல் காங்கிரஸ்" ஆகுமென்பதை முதலியாரவர்கள் ஏனோ சிந்திக்கவில்லை. ஸ்ரீமான்கள். ஸ்ரீனிவாசய்யங்கார். சத்தியமூர்த்தி, அரங்கசாமி ஐயங்கார் மூவரிலும் இந்தியா லயித்து விட்டதா? ஸ்ரீனிவாசய்யங்கார் கோஷ்டியாரும் திரு. முதலியாரவர்கள் போன்ற விபீஷணர்களும் சேர்ந்திருப்பதினால் மட்டும்காங்கிரஸ் நாஷனல் காங்கிரஸ் ஆய்விடும்போலும்.

# தலைவர்களின் யோகம்.

சட்டசபை வோட்டுப்பிரசாரத்திற்கு மீ 30 ரூபாய் சம்பளத்திலும், மீ 30 ரூபாய் பத்தாவிலும் ஆக மீ 60 ரூபாயில் பிரசாரகர்களை நியமிக்க தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகக்கமிட்டி அதன் அக்கிராசனருக்குப் பூரண அதிகாரம் கொடுத்திருக்கிறது.

இனி தேசியத்தொண்டர் என்போருக்கு இது, கைமுதலில்லாத வியாபாரமாய்ப் போய்விட்டது. ஒத்துழையாமை மும்மரமாகநடந்த காலத்தில் ஆவேசத்தின் காரணமாய் ஜெயிலுக்குப் போய்வந்து, பட்டணங்களிலும், கிராமாந்தரங்களிலும், செல்வாக்குப்பெற்று, இப்போது கஞ்சிக்கில்லாமல், திருடவும், ஒருவரிடம் கூலி வாங்கிக்கொண்டு, ஒருவரைத்திட்டவும், அடிக்கவும் செய்துகொண்டிருக்கும் தொண்டர்களுக்கு இப்படி ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது தொண்டர்களின் யோகம்தான்.

ஸ்ரீமான். சீனிவாசய்யங்கார் போன்ற தலைவர்கள், இப்படி ஒரு தீர்மானமில்லாமலிருக்கும்போதே, இம்மாதிரியான தொண்டர்களைக்கொண்டு தலைவராகியிருக்க, காங்கிரசிலே இம்மாதிரி ஓர் தீர்மானமும் அதன் அதிகாரமும் அவர் கையிலே இருக்க ஏற்பட்டதானது, தொண்டர்களின் யோகத்தைவிட தலைவர்களின் யோகமே பெரிதெனச்சொல்லவேண்டும்.

இனி ஒவ்வொரு ஊரிலும் சுயராஜ்யக்கக்ஷி தலைவர்களுக்கு ஜேய் சப்தம் வானத்தைப்பிளக்கும், ஜஸ்டிஸ் கக்ஷியைத்திட்டும் சப்தம் மேல் உலகத்தையும் நடுக்குறச்செய்யும், சுயராஜ்யக்கக்ஷியை ஒப்புக்கொள்ளாதவர்கள், வெளி ஊர்களில் மீட்டிங்கு போட முடியாது, போட்டாலும், விளக்குவராது; வந்தாலும் கல்லுகளும், மண்ணுகளும், கேள்விகளும், பறக்கும். மிஞ்சி இத்தனையும் சகித்துக்கொண்டு நடத்தினாலும், பத்திரிக்கைகளில் வராது; கூச்சலும், குழப்பமும், மீட்டிங்கைக்கலைக்கும். இதெல்லாம் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பணமும், காங்கிரஸ் பணமும் செய்தாலும், பிராமணப்பத்திரிக்கைகள் ஜஸ்டிஸ் கக்ஷியும், சுயராஜ்யக்கக்ஷியை ஒப்புக்கொள்ளாதவர்களும் செய்ததெனப்பிரசாரங்கள் செய்யும், ஆதலால் சுயராஜ்யக்கக்ஷிக்கு இனி மேல் என்ன குறை! இம்மாதிரி சுயராஜ்யக் கட்சியே நீ நீடூழி வாழ்க.!!

---

அமராவதி காங்கிரஸையும் சென்னை மாகாணப்பிராமணரல்லாதார் மகா நாட்டையும் இழித்துக்கூற பிராமணப்பத்திரிகைகள் எவ்வளவோ பாடுபடுகின்றன. தான் சாக யாராவது மருந்துண்பார்களா? பிராமணப்பத்திரிகைகள் ஓல மிடுவது நியாயமே. ஆனால் திரு. முதலியாரவர்களும் ஏன் ஓல மிடவேண்டும். வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்துக்கு எதிர்ப் பிரசாரம் செய்யப் போவதாக முதலியாரவர்கள் பயமுறுத்துகிறார்கள். எதிர்ப்பிரசாரம் யாருக்கிடையில்? பிராமணர்களுக்கிடையிலானால் அவர்கள் முயற்சி சாத்தியமாகும். தமிழர்களுக்கிடையில் அவர்கள் பிரசாரம் செய்வது வீண். தமிழர்கள் விழித்துவிட்டார்கள்! அவர்கள் பார்வையில் முதலியார் பழைய முதலியாராகக்காணப்படவில்லை. பார்ப்பன முதலியார் மொழிகளுக்குத் தமிழர்கள் செவிசாய்க்கார்கள். முதலியார் சங்கத்தமிழில் பேசினாலும் சரி! நச்சினார்க்கினியம் பேசினாலும் சரி! முதலியார் மொழிகள் இனித்தமிழர்களுக்கு வேப்பங்காய்; அய்யங்கார் கோஷ்டியாருக்குத் தேவாமிர்தம்.

ஹா! தலைவிதியே! முதலியாரவர்களைப்பற்றி இவ்வாறும் எழுத நேர்ந்ததே. தேசம்பெரிதா, வகுப்புப்பெரிதா என்கிறார்கள் நம் அண்ணா உண்மை பெரிதா? சகோதரவாஞ்சை பெரிதா? என்கின்றது நம் மனச்சாட்சி.

உலகம் முழுதும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஆதரிக்கும் போது முதலியாரவர்கள் எதிர்ப் பிரசாரம் செய்ய ஏனோ புறப்படவேண்டும். காங்கிரஸ் ஒப்புக்கொண்ட கொள்கையை-தேசபந்து ஒப்புக்கொண்ட கொள்கையை—இந்திய மண்ணில் வேரூன்றித்தழைத்துவரும் கொள்கையை—இந்தியன் ஸோஷியல் ரிபார்மர், ஹிந்து முதலிய பார்ப்பனப் பத்திரிகைகளும் ஆதரிக்கும் கொள்கையை—சென்னை மாகாணச்சங்கம் கண்டகாலத்து, திரு. முதலியாரும், டாக்டர் நாயுடுவும் ஆதரித்த கொள்கையை—தற்காலத்து மயிலாப்பூர் கோஷ்டியைத் திருப்தி செய்தவற்காக மட்டும் திரு.முதலியாரவர்கள் எதிர்க்கத்தொடங்குவது வெகு விநோதமாகவே இருக்கின்றது. தை 4-உ வெளிவந்த "குடி அரசின்" தலையங்கத்தை திரு. முதலியாரவர்கள் மனம்பொருந்தி வாசித்தால் எதிர்ப் பிரசாரம் செய்யத்துணிவு கொள்ளார்கள். பின்னும் சாடிப்புறப்பட்டால் அது அவர்கள் பாடு. சொல்லவேண்டியதைச்சொல்ல முடியுமேயன்றி வாய்ப்பூட்டும் போட நம்மாலாகாது! யாரைவிட்டது காண் தலைவிதி; எவரை விட்டது காண்.

வஞ்சிகேசரி.

---


# திராவிடன் பத்திரிகை.

பொதுவாக நமது நாட்டுக்கும் சிறப்பாகப் பிராம்மணரல்லாதாருக்கும் உண்மையாக உழைக்கும் பத்திரிகைகளில் நமது அருமைத் "திராவிடன்" ஒன்றென்பதை நியாய புத்திபுள்ளவர்கள் மறுக்கமாட்டார்கள். அப்பத்திரிகையானது தமிழ் மக்களின் முன்னேற்றை லக்ஷியமாய்க்கொண்டே பிறந்தது. அதன் பேருழியத்தால், தமிழ் மக்கள் எவ்வளவோ முன்னேறியிருப்பதை யாவருமறிவர். ஆனால் அதை ஆதரித்து வரும் தமிழ் மக்கள் சிலர் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கவேண்டியிருக்கிறது. ஏனெனில் இதன் வளர்ச்சிக்கு குறுக்கே பல ஊறுகள் உண்டு. முதலாவது நமது இயக்கத்திற்கே எதிரிடையானவர்களின் பிரசாரம். இரண்டாவது காங்கிரசிலிருந்து வேறுபட்டதென்ற கானல் நீர். மூன்றாவது சந்தா அதிகம், என்ற தயக்கம். இவைகள் வழியை மறித்தும் பல கஷ்டங்களுக்கிடையே தயங்காது தொண்டு செய்துதான் வந்திருக்கிறது. உண்மையாக யோசித்தால் எவ்வளவோ நஷ்டம் அடைந்திருக்குமென்பதில் தடையில்லை. இருந்தும், முயற்சி திருவினையாக்கும் என்ற உறுதியுடன் வேலை செய்கிறது. நமது இயக்கம் வேரூன்றி, வரவர, நமது எதிரிகளுக்கு யோகம் குறைந்துவருவது பொய்யல்ல. அதற்காக, அவர்கள் இப்பத்திரிகை, பிராமணரைத்திட்டுவதற்கே ஏற்பட்டதென்றும், துவேஷத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றதென்றும், ஜாதி வித்தியாசத்தைப் பரப்புவதென்றும் சொல்லி சூழ்ச்சிப்பிரசாரம் செய்கின்றனர்.

காங்கிரசிலிருந்து வேறுபட்டதென்பதைப்பார்ப்போம். முட்டுக்கட்டை, சட்டமறுப்பு, ஆணித்தரமான பேச்சு, குடியைத்தூக்கி எறிந்து விடுகிறோம்; என்கிற படாடோபத்திற்கு, திராவிடன் கொள்கை வேறுபட்டதென்பது பொய்யல்ல. ஆனால் உண்மையாக காந்தியடிகளின் தத்துவமாமாகிய மது விலக்கு, தீண்டாமை ஒழித்தல், கத்தரபிவிருத்தி இதுகளுக்கு பாடுபடுவதும், அதோடு நமது வகுப்பு முன்னேற்றத்திற்கு உழைப்பதும் நமது "திராவிடன்" அல்ல என்று சொல்லித்திரிவது உண்மையல்ல.

சந்தாவை யோசிப்போம். எட்டுப்பக்கங்களிலிருப்பதும், இதே சந்தாவைக்கொண்ட சில பத்திரிகை அதிக பக்கங்களைக்கொண்டிருப்பதும் உண்மையே. ஆனால், பக்கத்தை எண்ணுவது நமது வேலையல்ல, விஷயத்தைத்தான் கவனிக்கவேண்டும். எப்படியெனில் ஒரு வீணை வாசிக்கிற மகா வித்வான் ஒரு மூட அரச சமஸ்தானத்தில் போய் அருமையாக தனது வித்வத்தைக் காண்பித்து வாசித்தார். அவ்வரசன் மந்திரியைப்பார்த்து அவர் வீணையில் எத்தனை புரடையிருக்கிறதென்றான். ஒன்று என்றவுடன், 5-ரூபாய் சன்மானம் கொடுக்கும்படி உத்திரவாயிற்று. வித்வான் மனது வருத்தத்துடன் நின்று கொண்டிருக்கும்போது, இன்னொரு பேர்வழி ஒரு கம்பில் 3 புரடை கட்டிக்கொண்டு வந்து பாட ஆரம்பித்தான். மிகவும் ஆபாசமாய் இருந்தது; ஆகிலும் அரசன் புரடையை எண்ணும்படி உத்திரவிட, 3 என்று சொன்னவுடன், புரடைக்கு ஐந்து வீதம் சாங்க்ஷன் செய்து விட்டார். வித்வானும் இதுநல்ல யோசனை; இந்த முட்டாள்களிடம் பணத்தைப்பறிப்பது பாவமல்ல என்று நினைத்து, மறுநாள் வீணை பூராவும் இடமுள்ளவரை புரடைகளாகக்கட்டி வந்து ஒவ்வொன்றுக்கும் ஐந்து ரூபாய் வீதம் பெற்றுப்போனார். புரடையென்பது (காய்ந்து போன சுரைக்காய்) அதுபோல, நாம் பக்கம் அதிகமா, கம்மியா, என்று பார்க்காமல் விஷயத்தைத்தான் கவனிக்கவேண்டும். அப்படிக்கவனிப்போமானால் அதிகப் பக்கங்களிலிருக்கிற பத்திரிகைகளில் மோட்டார், விஸ்கி, பிராந்தி பாட்டல் முதலிய உருவங்களும், விளம்பரங்களும், பிராமண சங்கீத வித்வான்களைப் பற்றிப் புகழ்ந்து எழுதிவரக்கூடிய சங்கீதக்குறிப்பு, போன்ற தொடர்ச்சி வியாசங்களும், நீங்கி மற்ற பாகங்களை, அதுவும் வேண்டியதை மட்டும் எடுத்துப் பார்த்தால், திராவிடனில் பக்கம் கம்மியென்பதும், சந்தா அதிகம் என்பதும் உண்மையல்ல. மைல் ஒன்றுக்கு ஒன்றரை பைசாவிலிருந்த ரயில் சத்தம் 4 பைசாவாகியும் தமாஷாக்களுக்குக்கூட பிரயாணம் செய்கிறவர்கள் இல்லையா? ஒரு கெஜம் மல் 0—6—0 ஆக இருந்து ஒரு ரூபாய்க்கு வந்தும் மல்லுக்கு மல்லுக்கட்டுவாரில்லையா.?. காப்பி வீசை 0-14-0 விலிருந்து 3—9—0 ரூபாயுக்கு வந்தும் குடிப்பாரில்லையா? இப்

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு.

குரோதன-ஞு தை-மீ உரு-வ

## நன்றிபாராட்டுதல்.

உண்மைச் சகோதரர்களே!

"குடி அரசு" 34-வது இதழ் (27—12—25) ஒன்பதாவது பக்கத்தில் "குடி அரசு"க்குப் புது ஆண்டு சன்மானம் என்பதாக ஒரு சிறு வேண்டுகோள் விடுத்திருந்தோம். அவ்வேண்டுகோளைச் சகோதரர்கள் மதித்துக் கனப்படுத்தியதற்கு அதாவது 1—1—26-ந்தேதியிலிருந்து 31—1 26-ந்தேதி முடிய ஜனவரி மீத்தில் 307 சந்தாதாரர்கள் ஷை வேண்டுகோளை உத்தேசித்துத் தாங்களாகவும், தங்கள் நண்பர்கள் மூலமாகவும் சந்தாதாரர்களாகச்சேர்ந்தும்,இரண்டொருவர் சிறு தொகை உதவியும், கனப்படுத்தியதோடு கொளும்பு, மதுரை, திருச்சி, நாகை, கோவை முதலிய ஊர்களில் "குடி அரசி"ன் அபிமான ஏஜண்டுகள், தங்கள் சில்லரை விற்பனையை ஜனவரி மாதத்தில் ஒன்று, இரண்டாய், மூன்ருய்ப் பெருக்கியும், 'குடி அரசி'ன் முன்னேற்றத்தில் பொறுப்பு எடுத்துக் கொண்டதற்கும், "குடி அரசி"ன் சார்பாகவும், பிராமணரல்லாதார் பாமர மக்கள்—தீண்டப்படாத மக்கள்-சார்பாகவும். நாம் நெஞ்சார நன்றிபாராட்டுகிறோம்.

"குடி அரசு" வாரம் இரு முறை—மும்முறை—தினப்பதிப்பு ஆகியவைகளாக மாறவேண்டும் என்பதாக ஆசைப்பட்டு, அதற்குற்றவழிகளைச் சொன்னவர்களுக்கும், பல விதங்களில் உதவி செய்வதாகச் சொன்னவர்களுக்கும்,மற்றும்"குடி அரசி" னிடம் தங்களுக்குப் பூரண நம்பிக்கை இருப்பதாகச் சொல்லி நமக்கு ஊக்கமூட்டியவர்களுக்கும் நமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம், தவிர "குடி அரசை" வாரப்பதிப்பிலிருந்து இது சமயம் எவ்விதமாகவும் மாற்றசக்தியற்றவராய் இருக்கிறோம்.

ஏனெனில்,

1, நமது "குடி அரசு" வியாபாரப் பத்திரிக்கையாயில்லாமல், பிரசாரப் பத்திரிகை என்பதை உத்தேசித்து, குறைந்த சந்தா வைத்திருப்பதால், நஷ்டமடைய நேரிட்டிருப்பதோடு அதிக நஷ்டமடையவும் இதுசமயம் சவுகரியமில்லாதிருக்கிறது.

2 அன்றியும், அதன் பத்திராதிபரான ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கர் ஒவ்வொருவாரமும் 2 அல்லது 3 நாள் பிரசாரத்திற்கு வெளியூர்களுக்குப் போக வேண்டியதாயுமிருக்கிறது.

3. கதர் வேலைக்கும் காலத்தைச் செலவிடவேண்டியிருக்கிறதோடு, இன்னும் பல காரணங்களாலும் இது சமயம் மாற்ற முடியாமலிருப்பதற்கு மன்னிக்கவும்.

வேண்டுமானல் வேறு கனவான்கள் யாராவது ஏற்றுகொண்டு நடத்துவதாய் இருந்தால், அவர்களிடம் சர்வ சுதந்திரத்துடன் "குடி அரசு" பத்திரிக்கையை ஒப்புக்கொடுத்து விட்டு, "குடி அரசு" க்கு ஊதியமில்லாத உதவியைச் செய்வதில் யாதொரு ஆக்ஷேபணையும் இல்லை என்பதையும் உண்மையாய்த் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## மகாத்மாவின் நிலை.

காந்தி அடிகளின் திரேகநிலையும் மனப்பான்மை நிலையும் அசைவுற்றுப் போய் விட்டது என்பது அவருக்கு அடிக்கடி ஏற்படும் காயலா மூலமாகவும் அவர் அடிக்கடி வெளிப்படுத்தும் அபிப்பிராய மூலமாகவும் நன்கு வெளியாகிறது. அவருக்கு மன உறுதியுள்ள காலத்தில் காயலாவே ஏற்படுவதில்லை. ஏற்பட்டாலும் இயற்கை முறைகளிலேயே சவுக்கியப்படுத்திக் கொள்வார். இப்பொழுதோ அவருக்கு கோய்னுவும் இஞ்சக்ஷனும்தேவையாய்ப்போய்விட்டது. ஆதலால இயற்கை சிகிச்சையில் உள்ள உறுதி, ஆட்டம் கொடுத்து விட்டதென்றே சொல்லவேண்டும். அது போலவே ராஜீய விஷயத்தில் இருந்த உறுதிகளும் ஆட்டம் கொடுத்து விட்டதாகவே கருதவேண்டியதாய் விட்டது. மகாத்மா ஜெயிலில் இருந்து வந்தவுடன் இருந்த மனநிலையும் ஸ்ரீமான்கள் தாஸ்,நேரு அவர்கள் கேட்டுக்கொண்ட பின் ஏற்பட்ட மனநிலையும் கல்கத்தா ஒப்பந்த மனநிலையும், பாட்ன ஒப்பந்த மனநிலையும் தான்ஓய்வு எடுத்துக் கொண்ட மனநிலையும்,தனக்கு நம்பிக்கையில்லாத திட்டத்திற்கு தான் தன்னல்கூடிய உதவி செய்வதாகச் சொல்லும் மனநிலையும் பார்த்தால் தயவு தாக்ஷண்ணியம் கருணை என்பதுகள் நமது மகாத்மாவை ஆவாகனப்படுத்திக்கொண்டு பாத்திராபாத்திரமறியாமலே மகாத்மாவை ஆட்டிவைக்கின்றன.| இவ்வளவும் போதாமல ஸ்ரீமான். சி ஆர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் விஷயத்திலோ இவைகள் தலை கால்கூட தெரியாமல் ஆட்டிவைக்கின்றது.

ஸ்ரீமான் தாஸ் நேரு இவர்கள் விஷயத்திலேயே அவர்கள் சொல்லுவது போல் எல்லாம் மகாத்மா ஆடினரென்றால் ஸ்ரீமான் ஆச்சாரியார் விஷயத்தில் கேட்கவும் வேண்டுமா? ஆச்சாரியார் நினைப்பது போலெல்லாம் ஆடினால் தானே சரியாகவிருக்கும், ஆதலால் அதற்கு ஏற்றாற் போலவே இப்பொழுது மகாத்மா ஆடி வருகிறார்.

ஸ்ரீமான் ஆச்சாரியார்:—

மகாத்மாவே நான் பிரிட்டிஷ் கோர்ட்டுக்குப்போய் எனது வக்கீல் சாமார்த்தியத்தால் ஆர்க்குமெண்ட் செய்து ஒரு கேசு ஜெயித்து வந்தேன். ஆனல், ஜனங்கள் சந்தேகப்படுகிறார்கள். தயவு செய்து இதற்கு ஆசி கூறுங்கள்.

மகாத்மா:—ஆ! ஆ! ரொம்பவும் சரி; அதுதானே ஒத்துழையாமையின் அடிப்படை. யாரோ என்னமோ சொல்லட்டும்; நீங்கள் பயப்படாதீர்கள்.,

ஸ்ரீமான் ஆச்சாரியார்:— மகாத்மாவே மதுவிலக்கு என்கிற கொள்கையைவைத்து சுயராஜ்யக்கட்சியின் பேரால் எனது பிராமணருப்பாருக்குஓட்டு வாங்கிக்கொடுக்க வேண்டும். தயவு செய்து இதையும் ஆதரித்து ஆசி கூறுங்கள்.

மகாத்மா:— ஆ! ஆ! ஆக்ஷேபணை என்ன, நீங்கள் செய்தது ரொம்பவும் சரி. சுயராஜ்யக் கட்சியார் பரம உத்தமர்கள்; அவர்கள் மதுவிலக்கை ஏற்றுக்கொண்டது தேசத்திற்கே பெரிய லாபம்; அவர்களை ஜெயிக்கவேண்டும்; நீங்களும் அவர்களுக்கு வேலை செய்வதுதான் மோக்ஷம்.

என்று இம்பாதிரி அடிக்கடி உதவி வருவதைப் பார்க்கும்போது மகாத்மாவின் மனஉறுதியின் நிலை நமது புத்திக்கு புலப்படாதிருப்பதோடு, கவலைப்படவேண்டியதாகவே யிருக்கிறது. ஒருசமயம் மகாத்மா இவ்வாட்டமான மன உறுதிகளின் பலனல் பின்னல் எல்லாம் சரிப்படுத்திக்கொள்ளலாம், என்று நம்பிக்கை கொண்டு இருக்கலாம். உதைத்தகால் புழுப்பதற்கு முன் அடிவயிற்றில் சீ கட்டிக்கொண்டு போலிருக்கிறதே அதற்கு என்ன செய்வது என்கிற கவலையும், மறுபடியும் நமது நாட்டை நடத்த வேண்டிய நிலை நமது மகாத்மாவுக்கு வருமானல் இப்பொழுது மகாத்மாவை ஆட்டமுறச் செய்தவர்களே அந்தக் காலத்திலும் வந்து குறுக்கிட்டு இந்த மாறுதல்களையெல்லாம் எடுத்துக்காட்டி மறுபடியும் உபத்திரவம் செய்ய வந்துவிடுவார்களே என்கிற பயமும்தான், இவற்றைப் பற்றி கவலைப்பட வைக்கிறதே அல்லாமல் மற்றபடி மகாத்மாவினிடம் எவ்வித சந்தேகமோ, கற்பனையோ யாருக்கும் கொஞ்சமும் இருக்காது என்றே உறுதி கூறுவோம்.

## கொங்கு வேளாளர் மகாநாடு

இம்மாதம் 20, 21 தேதிகளில் பொள்ளாச்சியில் கோவை ஜில்லா கொங்குவேளாளர் மகாநாடு. ஸ்ரீமான். P. சிங்கய்ய கவுண்டர் அக்கிராசனத்தில் நடைபெறும்.

## கோவை தாலூகா காங்கிரஸ் மகாநாடு

கோவைதாலூகா மகாநாடு இம்மாதம் 28-ந்தேதி ஞாயிற்றுகிழமை வெள்ளைக்கிணற்றில் ஸ்ரீமான், S. ராமநாதன் அக்கிராசனத்தின்கீழ் நடைபெறும்.

குறிப்பு:—

இவ்விரு மகாநாட்டுக்கும் ஈரோடு ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரும் செல்லக்கூடும். மதுரை மீட்டிங்கு 28-ந் தேதி இருப்பதால் ஒருசமயம் இந்தத் தேதி மாறுபட்டாலும் மாறுபடலாம் என்று நினைக்கிறோம். (ப—ர்)

# எலெக்ஷன் தந்திரம்.

## (தேர்தல் வாக்குத்தத்தம்)

(சித்திரபுத்திரன் எழுதியது.)

தமிழ் நாட்டில் பிராமணாதிக்கம் வலுவடைவதற்காக, வரப்போகும் சட்டசபைத்தேர்தல்களில் பிராமணர்களும்—மற்றும் பிராமணர்களின், பிராமணரல்லாத அடிமைகளும், பிராமணாதிக்கத்தின் சார்பாய் எப்படியாவது ஸ்தானம் பெற்று, இதுவரையிலும் பிராமணரல்லாதார் இயக்கங்களின் மூலமாகவும், மகாத்மாவின் ஒத்துழையாக் கொள்கையின் நிர்மாணத்திட்டங்கள் மூலமாகவும், ஒரு சிறிதளவு முன்னேறியிருக்கும் பிராமணரல்லதார் முன்னேற்றத்தையும், தேச நலத்தையும், அடியோடழித்து, ஆதிக்கம் பெற காங்கிரசின் பெயரால் நமது நாட்டுப்பிராமணர்களின் சூழ்ச்சிக்கொடி வானமளாவப்பறக்கிறது.

இக்கொடியை பிராமணரல்லாதாரிலேயே சில விபூஷணாழ்வார்கள் தாங்கித் திரிகின்றார்களெனச் சொல்ல வெட்கப்படுகின்றேனாயினும், உண்மையைச் சொல்ல அஞ்சுவது அதைவிட வெட்கக் கேடாதலின் சொல்லாமல் விடுவதற்கில்லை.

1. தற்காலம் இந்திய தேசிய காங்கிரஸ் என்று சொல்லும் விடுதலை இயக்கமானது பெரும்பாலும் பிராமணர்கள் கையில் சிக்கிக்கொண்டதென்பதை யாவராலும் மறுக்கமுடியாது.

2. காங்கிரசின் தலைவர், ஸ்ரீமதி. சரோஜனிதேவியாராவார். அந்த அம்மையார் பிராமணரல்லாதாருக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாலும், இவர் பிராமண ஸ்திரீயென்பதில் எவருக்கும் சந்தேகமிருக்காது.

3. அதன் காரியதரிசிகளோ தமிழ் நாட்டுப்பிராமணர்கள் இருவர். ஒருவர் ஸ்ரீமான். ஏ. ரெங்கசாமி ஐயங்கார். அவருடைய மனப்பான்மையும், பிரசாரமும், வாழ்வும் பிராமணரல்லாதாரைத் தீண்டாதாராக்கி, பிராமணாதிக்கமே உலகத்தையெல்லாம் ஆட்கொள்ளவேண்டுமென்கிற கருத்துள்ளவர், என்பதை எவரும் ஆக்ஷேபிக்க முடியாது. அவர் நடத்தும் சுதேசமித்திரன் பத்திரிகைக்குப் பயந்து, நமது நாட்டிலுள்ள எத்தனை பிராமணரல்லாத "வீரர்கள்" சர்க்கஸ்காரனிடம் அகப்பட்ட புலியைப்போல் நடந்துவருகின்றார்களென்பதும், அப்பத்திரிக்கையின் பிரசாரத்தால் எவ்வளவு தூரம் பிராமணரல்லாதார் முற்போக்கு அழுத்தப்பட்டு வருகின்றதென்பதும், உலகமறிந்த விஷயமே.

(4) மற்றொரு காரியதரிசி ஸ்ரீமான். கே. சந்தானம் என்று சொல்லும் (பஞ்சாப்பிலுள்ள) தமிழ் நாட்டு அய்யங்கார் பிராமணர். இவர் மைலாப்பூர். ஐயங்கார் வக்கீலான ஸ்ரீமான். கே. பாஷியத்தின் சகோதராவர். "இந்தியப் பிராமணாதிக்கத்தின் சங்கத்தின் சார்பாய், இதர ஒவ்வொரு மாகாணங்களுக்கும் சென்றிருப்பது போல, பஞ்சாப் மாகாணத்துக்குச் சென்றுள்ள பிரசார ஏஜண்டு இவர் என்பதையும்" எவரும் மறுக்கமுடியாது.

5. காங்கிரசின் (டிக்டேட்டர்) என்னும் சர்வாதிகாரியான, ஸ்ரீமான். மோட்டிலால் நேரு அவர்கள், வெளிப்படையாய் மாமிசம் சாப்பிட்டாலும், மதுவருந்தினாலும், பிராமணர், பிராமணரே என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை.

6. மற்றும் தமிழ் நாட்டின் சார்பாய் காங்கிரஸ் நிர்வாகத்தில் ஸ்தானம் பெற்றவரும், இந்நாட்டுக்கேற்ற திட்டம் வகுப்பவருமான ஸ்ரீமான். எஸ். ஸ்ரீனிவாசய்யங்காரும், எப்படியிருந்தபோதிலும் அவரும் பிராமணரே என்பதை நான் எடுத்துக்காட்டவேண்டியதில்லை.

7 தமிழ் நாட்டுப் பிராமணர்களின் சூழ்சிக்குக் கடுகளவும் பின்வாங்காத, மகராஷ்டிர தேசத்துப் பிராமணரில் ஸ்ரீமான். அபயங்கார் என்னும் பிராமணரும் காங்கிரசின் நிர்வாக அங்கத்தினர் என்பதையும் எடுத்து க்காட்டவேண்டியதில்லை.

8. மற்றப்படி மகாத்மா காந்தி, மௌலானா. மகமதலி, ஸ்ரீமான்.ஜம்னலால்பஜாஜ், இவர்கள் அங்கத்தினர்களாயிருந்தாலும், தள்ள முடியாமல், தாட்சண்யத்திற்குக் கட்டுப்பட்டுத் தங்கள் பெயரைக் கொடுத்து நிர்வாகத்தில் கலக்காமலிருக்கின்றவர்கள், என்பதும் நான் எடுத்துக்கூறத்தேவையில்லை.

9. லாலா லஜபதிராய் அவர்களோ பஞ்சாப் மாகாணத்தில் மெஜாரிட்டியாயிருக்கும், மகமதிய சமூகத்தாரிடம், சந்தேகமும், பயமுங்கொண்டு, பிராமணாதிக்க சபையாகிய இந்துமகா சபையினிடம் அடைக்கலம், புகுந்தவர்.

10. மீதியாயிருப்பவர், ஸ்ரீமான். சென்குப்தா. அவர் வைசியராயிருந்தபோதிலும், தமிழ் நாட்டு ஸ்ரீமான். சத்தியமூர்த்திக்கொப்பான சத்தியமூர்த்தியாவர். அவருக்கும், நமது சத்தியமூர்த்தி ஐயரைப்போலவே, மீட்டிங்குக்கு ஓர் உடையும், வீட்டுக்கு ஓர் உடையும், வெள்ளைக்காரரைப் பார்க்க ஓர் உடையுமாக ஆக மூவுடை தரிப்பவர். அவருக்கு உலகமே கல்கத்தா கார்ப்பொரேஷன் பிரசிடெண்டு ஸ்தானம்தான்.

ஆகிய இவர்கள் தான் 33 கோடி இந்தியருக்கும் ஜாதகமெழுதுபவர்கள்!

அப்படியிருந்தாலும், தமிழ்நாட்டுக்கு ஜாதகம் எழுதுகிறவர்கள், குறிப்பாகவும், சிறப்பாகவும் ஸ்ரீமான்கள். ஏ. ரெங்கசாமி அய்யங்கார், கே. சந்தானம் ஐயங்கார், எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார் ஆகிய மூன்று ஐயங்கார் "சுவாமிகள்" என்பதை எடுத்துக்காட்டவேண்டியதில்லை. இவர்களுக்கு சாரதியாயிருப்பவர் பாரதபோருக்கு கிருஷ்ணன் போல பிராமணாதிக்கப் போருக்கு நமது ஸ்ரீமான். சி. இராஜகோபாலாச்சாரிய "சுவாமிகள்" அமர்ந்திருக்கிறார். அவருக்கு தமிழ் நாட்டின் பெரும்பாகத்தில் நல்ல பிள்ளை யென்கிற பெயருண்டு.

ஆதலால், தமிழ் நாட்டு விடுதலை இயக்கம் இவ்வய்யங்கார் "சுவாமிகளி"டத்திலேயே அடங்கிவிட்டது. இதை அநுசரித்து தேர்தல் பிரசாரமும் வெளிக்கிளம்பிவிட்டது. இதற்காக ஸ்ரீமான். ஸ்ரீனிவாசய்யங்கார் காங்கிரஸ் கட்சியின் வேலைத்திட்டம் என்கிற ஒரு ஆயுதத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். அதனுடைய உத்தேசம் தமிழ்நாட்டுப் பிராமணரல்லாதாரை ஏமாற்றுவதற்கு இவ்வாயுதம் போதுமா; போதாதாவென்று பரீக்ஷை பார்ப்பதற்காக அனுப்பப்பட்ட முதல் ஆயுதமென்றே நினைக்கிறேன். அத்திட்டத்தில் உள்ள தத்துவங்களாவன:—

1. இரட்டையாட்சியில் உண்மையான அதிகாரமும், பொருப்பும் இல்லையென்பதும், அதில் சச்சரவுக்கும், பிளவுக்கும்தான் இடமிருக்கிறதென்பது.

2. இம்முறை அமுலுக்கு வந்த 6 வருட அனுபவத்தில் அதிகச் செலவும், வீண்பிரயாசையும் ஏற்பட்டிருக்கிறதேயல்லாமல் ஜனங்களுக்கு எவ்வித நன்மையும் செய்ய ஏதுவில்லாமலிருப்பதால், இம்முறையை நிராகரிக்கும்படி வோட்டர்களைக் காங்கிரஸ் கட்சி வேண்டிக்கொள்கிறது.

3. ஆறு வருஷமாய் ஜஸ்டிஸ் கட்சியார் மந்திரி பதவிகளை வகித்து வருகிறார்கள்; அவர்கள் ஜனங்களுக்கு நம்பிக்கை பெறத்தக்க ஒரு காரியத்தையும் செய்யவில்லை; சுயராஜ்யமடைவதற்குப் பாதகம் செய்திருக்கிறார்கள். ஆதலால் ஜஸ்டிஸ் கட்சியாருக்கு வோட் செய்யாமல், காங்கிரஸ்காரர்களுக்கே வோட் செய்து, சட்டசபைக்கு அனுப்பவேண்டுமென்பது.

4. காங்கிரஸ் கட்சி அபேக்ஷகர்கள் அப்போதைக்கப்போது காங்கிரஸ் கமிட்டியாரால் பிறப்பிவிக்கப்படும் உத்தரவுப்படி நடப்பதாகப் பிரமாணம் செய்வார்களென்பது.

5. தேசத்திற்கு விடுதலைஅளிக்கவல்லது சாத்வீக சட்டமறுப்புத்தான் என்றும், ஆனால் தேசம் அதற்குத் தயாராயில்லை யென்றும், ஆதலால் காங்கிரஸ் கட்சியானது சுயராஜ்யத்திற்கு தடைவிளைவிக்கக் கூடிய காரியங்கள் சர்க்காரால் செய்யப்பட்டாலும் மற்றவர்களால் செய்யப்பட்டாலும் எதிர்த்துப் போராடுமென்றும் உறுதி கூறுகிறது.

6. கான்பூர் காங்கிரஸ் தீர்மானத்தில் சொல்லியுள்ள நிபந்தனைகளுக்கு சர்க்காரார் திருப்தியான பதிலளிக்கும்வரை உத்தியோகம் ஏற்காத கொள்கையை அனுசரிக்கின்றதென்றும், நிர்மாணத்திட்டத்தைச் சட்டசபையில் நிறைவேற்றி வைக்கப் பாடுபடுமென்றும். எல்லா ஜாதியினருக்கும் சம அந்தஸ்தும், சந்தர்ப்பங்களும் அளிக்கவேண்டுமென்பதை ஆதரிப்பதாகவும், சென்னை சட்டசபையில் பூரண மதுவிலக்குக்காக அதிகப்படி எதிர்த்துப் போராடுமென்றும், இன்னும் பல ஆசை வார்த்தைகளையும், சென்ற தேர்தல்களில் கொடுத்தவாக்குறுதிகளைவிட இன்னும் சில புதிய வாக்குறுதிகளையும் கொடுத்திருப்பதாகக் காண்கிறது.

இவைகளுக்குச் சமாதானம் எழுதுவதற்கு முன் ஒரு சிறு பழமொழியைச் சொல்லி விளக்கிவிட்டு பின்னால் சமாதானம் சொல்லுவேன். ஒரு பிராமணர் ஒரு கலியாணத்தில் தட்சணைவாங்கும்போது ஆத்மஸ்துதி பரநிந்தை, திரவியாபேட்சை ஆகிய மூன்றையும் வெறுத்து, நான்குவேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்துநாலு கலைக்கியானத்தையும் கெட்டுருப்பண்ணியிருக்கும், பெரிய கனபாடியாகிய எனக்கும் 2 அணா, எதிரில் நிற்கும் ஒன்றும் தெரியாத தற்குறிக்கும் 2 அணாவா என்று சொன்னார் என்பதாக ஓர் பழமொழி சொல்லுவதுண்டே. இதில் எந்தெந்த குணங்களை

வெறுத்ததாகச் சொல்லுகிறாரோ, அவையெல்லாம், அந்த சொல்லும் வார்த்தையிலேயே அவருடன் தலை சிறந்து விளங்குவதைப் பார்க்கலாம், அதாவது, ஆத்மஸ்துதி இல்லையென்கிறார்; நாலுவேதம், ஆறு சாஸ்திரம், முதலியவற்றை நெட்டுருப் பண்ணின கனபாடிகள் என்று சொல்லுகிறார்; பரநிந்தையை வெறுத்தேனென்கிறார்; எதிரில் இருப்போனை ஒன்றுந்தெரியாத தற்குறி என்கிறார். திரவிய அபேட்சை இல்லை என்கிறார்; அவனுக்கும் இரண்டணா எனக்கும் இரண்டணாவா என்கிறார்.

இதுபோல நமது சுயராஜ்யக் கட்சிக்காகக் காங்கிரஸ் போட்டிருக்கும் திட்டமும் இருக்கிறது. அதாவது,

1. “மேல்கண்ட காங்கிரஸ் திட்டத்தில்” இரட்டை யாட்சியில் உண்மையான அதிகாரமும், பொருப்பும் இல்லை யென்பதும், அதில் சச்சரவுக்கும், பிளவுக்கும் தான் இடமிருக்கிறதென்பது.”

சுயராஜ்யக் கட்சியார் இம்மாதிரி நினைப்பது வாஸ்தவமானால், இவர்கள் அவ்விரட்டை யாட்சி ஸ்தாபனத்தைக் கைப்பற்ற வேண்டிய அவசியமென்ன? அந்த ஸ்தாபனத்தில் பொறுப்புமில்லை; சச்சரவுக்கும் இடமிருக்கிறது, என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் பொறுப்புள்ளவர்களும், சச்சரவு வேண்டாதவர்களுமான யோக்கியர்களாகிய சுயராஜ்யகட்சியாருக்கு அங்கு என்ன வேலை? இதிலிருக்கும் இரகசியத்தை வாசகர்கள் தான் தயவு செய்து கவனிக்க வேண்டும்.

2. “இம்முறை அமுலுக்கு வந்த 6 வருஷ அநுபவத்தில் அதிகச் செலவும், வீண் பிரயாசையும், ஏற்பட்டிருக்கிறதேயல்லாமல், ஜனங்களுக்கு எவ்வித நன்மையும் செய்ய ஏதுவில்லாமலிருப்பதால், இம்முறையை நிராகரிக்கும்படி வோட்டர்களைக் காங்கிரஸ் கட்சி வேண்டிக்கொள்ளுகிறது” என்பது.

அதிகச்செலவும், வீண்பிரயாசையும் ஏற்பட்டு ஜனங்களுக்கு எவ்வித நன்மையும் செய்ய ஏதுவில்லாத ஸ்தாபனத்தைக் காங்கிரஸ்காரர் நிராகரிப்பதென்றால், அதற்கு அர்த்தமென்ன? மகாத்மா காந்தி சொன்னபடி அந்த ஸ்தானங்களையே நிராகரிப்பதா? அல்லது அந்த ஸ்தானங்களில் உள்ளவர்களை வெருட்டிவிட்டு தேச மக்கள் பணச்செலவில் சுயராஜ்யக் கட்சியார்போய் உட்கார்ந்துகொண்டு, அந்கஸ்தானங்களால் உண்டாகக்கூடிய காரியமாகிய, அதிகச் செலவையும், வீண்பிரயாசையையும், கட்சிப்பிளவுகளையும் சுயராஜ்யக் கட்சியார் செய்ய காங்கிரஸ்காரர்கள் ஓட்டு சம்பாதித்துக் கொடுப்பதா வென்பதை ஊன்றிக் கவனித்தால் சுயராஜ்யக் கட்சியின் காங்கிரஸ் திட்டத்தின் தத்துவம் வெளியாகும்.

3. “ஆறு வருஷமாய் ஜஸ்டிஸ் கட்சியார், மந்திரி பதவிகளை வகித்து வருகிறார்கள்; அவர்கள் ஜனங்களுக்கு நம்பிக்கை பெறத்தக்க ஒரு காரியத்தையும் செய்யவில்லை; சுயராஜ்யமடைவதற்குப் பாதகம் செய்திருக்கிறார்கள், ஆதலால் ஜஸ்டிஸ் கட்சியாருக்கு வோட் செய்யாமல் காங்கிரஸ்காரர்களுக்கே வோட் செய்து சட்டசபைக்கு அநுப்பவேண்டும்” என்பது.

இரட்டையாட்சியின் அமைப்பு பொது ஜனங்களுக்கு ஒரு நன்மையும் செய்ய முடியாதென்றும், அதில் நன்மை செய்யக்கூடிய ஒருவிதமான யோக்கியதையும் இல்லையென்பதும், சச்சரவுக்கும், பிளவுக்கும் இடமிருக்கின்றதென்பதையும் காங்கிரஸ்காரர்களே ஒப்புக்கொண்டு, மறுபடியும் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் ஒன்றும் செய்யவில்லையென்று அவர்கள் மீது பழிசொல்லுவதின் அர்த்தமென்ன? அந்த ஸ்தானங்களில் இடமிருந்து நன்மை செய்யவோ, பொறுப்பேற்கவோ, இடமிருந்து, ஜஸ்டிஸ் கட்சிக்காரர் செய்யாமலிருந்திருந்தால், ஒரு சமயம் ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர் பேரில் குற்றம் சொல்லலாம். அப்படியிருக்க, செய்வதற்கு இடமில்லாத ஓர் காரியத்தை, ஜஸ்டிஸ் கட்சிக்காரர் செய்யவில்லையென்று சொல்லுவது யோக்கியமாகுமா? அவ்வளவுடன் நிற்காமல், அவன் கிடக்கிறான் குடிகாரன் எனக்கு இரண்டுதிராம் வாரு என்பதுபோல், ஜஸ்டிஸ் கட்சியாருக்கு வோட் செய்யாதேயுங்கள், எங்களுக்கு வோட் செய்யுங்கள் என்று சொல்லுவது இருக்கிறது. இம்மாதிரியான நாணயமற்ற வார்த்தைகள் தனிப்பட்ட ஹோதாவில் ஒவ்வொருவர் சொல்லிக்கொண்டுபோனாலும் ஒருவிதத்தில் சகிக்கலாம். ஆனால் காங்கிரசின்பேரால் இம்மாதிரியான ஆபாசங்கள் வெளியிடுவதை எப்படி சகித்துக்கொண்டிருக்கமுடியுமென்பதை வாசகர்கள் தான் உணர்ந்து கொள்ளவேண்டும்.

4. “காங்கிரஸ் கட்சி அபேக்ஷகர், அப்போதைக்கப்போது காங்கிரஸ் கமிட்டியாரால் பிறப்பிவிக்கப்படும் உத்திரவுப்படி நடப்பதாகப் பிரமாணம் செய்வார்கள்” என்பது.

சந்தையும் ஒருவருடையதாயிருந்து, அதில கொள்ளையடிப்பதும் அவராகவேயிருந்து விட்டால், அப்புறம் அவர்களைக் கேட்கிறவர்கள் யார்? அதுபோல காங்கிரசும், காங்கிரஸ் நிர்வாகமும், சட்டசபைக்குப் போகிறவர்களும் ஒரே கூட்டத்தினராயிருக்கும்போது வேறு யாருக்கு ஜவாப்தாரியாயிருக்கக்கூடும்? வேறுயார்தான் இவர்களைக் கேட்கக்கூடும். மிஞ்சி யாராவது கேட்டால், கேட்பவர்களை ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களென்று சொல்லிவிடுகிறார்கள். ஆதலால் இந்த வாக்குறுதிகளினால் என்ன பிரயோஜனம்?

5. “தேசத்திற்கு விடுதலை அளிக்க வல்லது. சாத்வீக சட்ட மறுப்புத்தான் என்றும், ஆனால் தேசம் அதற்குத் தயாராயில்லை யென்றும், ஆதலால், காங்கிரஸ் கட்சியானது சுயராஜ்யத்திற்கு தடை விளைவிக்கக்கூடிய காரியங்கள் சர்க்காரால் செய்யப்பட்டாலும், மற்றவர்களால் செய்யப்பட்டாலும் எதிர்த்துப்போராடுவதென்றும் உறுதிகூறுகிறது” என்பது.

சட்டமறுப்பினால்தான் தேசத்திற்கு விடுதலையென்று வாயில் சொல்லிவிட்டு தேசம் சட்ட மறுப்புக்கு லாயக்கில்லை யென்று சொல்வதாயிருந்தால், சட்ட மறுப்பைப்பற்றி பேசுவதில் பிரயோஜனம் என்ன? சட்ட மறுப்பைப்பற்றி பேசுகிற சுயராஜ்யக்கட்சியாரும், “சட்ட மறுப்புஎன்கிற வார்த்தை சுயராஜ்யக் கட்சியிலிருந்து வருவதால்” சுயராஜ்யக் கட்சியை நான் மெச்சுகிறேனென்று சொல்லும், திரை மறைவிலிருக்கும் சுயராஜ்யக் கட்சியாரும் ஆகியவர்களுக்கு, சட்டமறுப்பு நமது தேசத்தில் மும்மரமாக இருந்த காலத்தில் இவர்களுக்கு அதில் நம்பிக்கையிருந்ததா? ஆயிரக்கணக்கான தொண்டர்கள் தமிழ் நாட்டில் சட்ட மறுப்புச் செய்து ஜெயிலுக்குப் போகும்போது, இச்சட்டமறுப்பு வீரர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள்? இவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையா? சட்ட மறுப்பு இருக்கிற காலத்தில், நம்பிக்கையில்லை; நம்பிக்கையில்லை என்று சொல்லி, வக்கீல் உத்தியோகத்திலும் பத்திரிக்கை உத்தியோகத்திலும், மாதம் 1000, 10000–மாகப் பணம் சம்பாதித்துக்கொண்டிருந்ததோடு, சட்டமறுப்பையும் தோல்வியுறச் செய்துவிட்டு, தேசமெல்லாம் ஒற்றுமையாயிருந்து, ஒருமிக்கச் செய்தும் தோல்வியுற்றுப்போன சட்ட மறுப்பைப் பாமரஜனங்களை ஏமாற்ற வாயிற்சொல்லுவதும், அதுவும் சட்டமறுப்புக்காலத்தில் ஒளிந்துகொண்டு திரிந்த பயங்காளிகள் வாயில் வருவதும், யோசிகதுப் பார்த்தால், இவையெல்லாம் பாமரஜனங்களுக்கு விளங்காமற்போகாது. ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்காரும், ஏ. ரெங்கசாமி ஐயங்காரும், சத்தியமூர்த்தியும், சி. வி. வெங்கிட்டரமண ஐயங்காரும், ஆதிநாராயண செட்டியாரும், திரு. வி. கலியாணசுந்தர முதலியாரும், எம். கே. ஆச்சாரியாரும், சட்டமறுப்பைப்பற்றிப் பேசுவதும், சட்ட மறுப்புக்காங்கிரசில் இருப்பதினால், நாங்கள் சந்தோஷப்படுகிறோம்; ஆதலால் சுயராஜ்யக்கக்ஷிக்கு வோட் கொடுங்களென்று சொல்லுவதும் எவ்வளவு கண்ணியமற்ற காரியமென்பது, வாசகர்கள் தான் அறிய வேண்டும்

சட்டசபையில், சுயராஜ்யத்துக்கு விரோதமான காரியத்தை எதிர்த்துப்போராடுவோமென்று சொல்லுகிறவர்கள் எங்கெங்கு போராடி என்னென்ன பலனை அடைந்தார்கள்? பூராமெஜாரிட்டியுள்ள மாகாணங்களிலாவது, போராடி பலன் அடையமுடிந்ததா?

6. “கான்பூர் காங்கிரஸ் தீர்மானத்தில் சொல்லியுள்ள நிபந்தனைகளுக்கு சர்க்கார் திருப்தியான பதிலளிக்கும்வரை உத்தியோகம் ஏற்காதகொள்கையை அநுசரிக்கின்றதென்றும், நிர்மாணத்திட்டத்தைச் சட்டசபையில் நிறைவேற்றிவைக்கப் படுபடுமென்றும், எல்லாஜாதியினருக்கும் சம அந்தஸ்தும், சந்தர்ப்பங்களும் அளிக்கவேண்டுமென்பதை ஆதரிப்பதாகவும், சென்னை சட்டசபையில் பூரண மதுவிலக்குக்காக அதிகப்படி எதிர்த்துப் போராடுமென்றும் வாக்குறுதிப்படி நடப்போம் ”என்றும்

சொல்லுவது"

சகல சமூகத்துக்கும் சம அந்தஸ்துக் கொடுக்கிறவர்கள், சென்றவருடம் இந்தியா சட்டசபைக்கும், இராஜாங்க சபைக்கும் எத்தனை பிராமணர்களை நிறுத்தினார்கள், எத்தனை பிராமணரல்லாதாரை நிறுத்தினார்கள். என்பதைக் கணக்குப் பார்த்தால் இந்த வார்த்தையின் உண்மை தெரியும். தாழ்ந்தவகுப்பாருக்கு, சுயராஜ்யக்கக்ஷியின் மூலம், தேர்தலுக்காக என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள்? எம்மாதிரியான தீர்மானத்தை நிறைவேற்றி வைத்திருக்கிறார்கள். ஸ்ரீமான் ஜெயவேலுக்கு, பத்து, ஐந்து கொடுத்துக்கூட்டிக்கொண்டு திரிவதினாலேயே, தாழ்ந்த வகுப்புக்கு நன்மை செய்ததாக ஏற்பட்டுப்போய் விடுமா? அல்லாமலும் மதுவிலக்குக்காக முக்கியமாய் வேலை செய்யப்போவதாக ஓர் ஆசை வார்த்தை காட்டுகிறார்கள். இது ஸ்ரீமான். இராஜகோபாலாச்சாரியாரால் சுயராஜ்யக்கக்ஷியின் வெற்றிக்கு ஏற்படுத்தப்பட்ட ஓர் புதிய மருந்து. இதை எப்படிப் பொது மக்கள் நம்ப முடியும்? "ஒன்றுக்கும் உதவாத சட்டசபையில்—சச்சரவுகளும், பிளவுகளும், அதிகச்செலவும், வீண் வேலையும் ஏற்படும் சட்டசபையில்"—எப்படி மதுவை விலக்கமுடியும்?

இவ்வளவு தூரம் ஜனங்களை ஏமாற்றத்துணிந்த சத்திய கீர்த்திகளால் தேசத்திற்கு நன்மைகள் ஏற்படும் என்று நினைப்பது எவ்வளவு முட்டாள் தனமென்பதை வாசகர்கள் தான் உணரவேண்டும்.

மேலும், சர்க்காரிடம் தேசநன்மைக்காக இப்போதுள்ள சட்டசபைகளில் கேட்கக்கூடிய காரியம் ஒன்றுமில்லையென்றும், ஆகக்கூடியதும் ஒன்றுமில்லையென்றும், மகாத்மா காந்தி முதல்; காங்கிரசிலுள்ள ஒவ்வொருவரும் ஒப்புக்கொண்டுதான், காங்கிரசில் ஒத்துழையாமைத்திட்டம் நிறைவேறிற்று. அப்படியிருக்க, இப்பொழுதுமாத்திரம் சட்டசபையில் என்ன காரியம் கேட்கமுடியும்? ஆனாலும், சுயராஜ்யக்கக்ஷியின் சர்வாதிகாரியான ஸ்ரீமான். நேரு உட்பட பலர் மிதவாதக்கட்சியாரையும் சேர்த்துக் கொண்டு பல தேவைகளைக்கேட்டு, பெரும்பான்மையான வோட்டுகளால் சட்டசபையில் நிறைவேற்றியும், சர்க்காரார் அவற்றைக் குப்பைத்தொட்டியில் போட்டுவிட்டதையும் பார்த்துவிட்டு, மறுபடியும், சர்க்காரைக்கேட்கிறோம் என்று சொல்லுவதின் அர்த்தமென்ன? அப்படியே இருந்தாலும், சர்க்காரார் திருப்தியான பதில் அளித்தார்களா? இல்லையாவென்று சொல்லுவதற்கு அதிகாரியார்? யார் கேட்கிறார்களோ, அவர்களேதான் பெரும்பாலும், அதிகாரிகளாயிருக்கின்றார்கள். தமிழ்நாட்டுப் பிராமணர்கள் கைக்கு, மந்திரிஸ்தானங்கள் கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டால், சர்க்காரார் சுயராஜ்யக் கக்ஷிக்கு தக்க பதிலளித்து விட்டார்களென்றுதான் அர்த்தம்! அந்த நிலைமை ஏற்படும்வரை சர்க்காரார் தக்க பதில் அளிக்கவில்லையென்று தான் சொல்லிக்கொண்டிருக்கவேண்டும். அல்லாமலும், அவர்கள் உத்தியோகங்களை ஒப்புக்கொள்வதில்லையென்று, சொல்லுவதற்குத்தான் அர்த்தம் எங்கேயிருக்கிறது. ஸ்ரீமான்கள். நேரு உத்தியோகம் ஒப்புக்கொண்டாகிவிட்டது; படேல் உத்தியோகம் ஒப்புக்கொண்டாகிவிட்டது; ஏ. ரெங்கசாமி ஐயங்காரும் உத்தியோகம் ஒப்புக்கொண்டாகிவிட்டது; மற்றும் பல சுயராஜ்யக் கட்சிப் பதிவிரதைகளும் உத்தியோகம் ஒப்புக்கொண்டாகிவிட்டது. அது மாத்திரமல்ல சுயராஜ்யக் கட்சியில் இப்போதுள்ள மெம்பர்களிலும் ராவ்சாகிப், ராவ்பகதூர், திவான்பகதூர்களும், தாலூகா போர்டு, ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி, யூனியன், பஞ்சாயத்து, செனட்சபை, ஜெயில்கமிட்டி, முதலிய பல ஸ்தானங்களில், சர்க்கார் தயவை நாடி நியமனம் பெற்ற மெம்பர்களும் நிறைந்திருக்கிற போது, நாங்கள் சர்க்கார் உத்தியோகத்தைப் பெறமாட்டோமென்று சொல்லுவது எவ்வளவு யோக்கியமான பேச்சென்பதை வாசகர்கள் தான் உணரவேண்டும்.

சம்பளமில்லாத இந்த உத்தியோகங்களையே பெறுவதற்கு ஆத்திரப்பட்டுக்கொண்டு திரிகிறவர்கள், சம்பளமுள்ள உத்தியோகம் கிடைப்பதாயிருந்தால் இவர்கள் வேண்டாமெனச்சொல்லிவிடுவார்களென்று சொன்னால் எந்த பைத்தியக்காரனாவது நம்பிவிடுவானோ?

அல்லாமலும், வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்களென்றும், மறுபடியும் ஓர் முறை சொல்லி புதுப்புதுவாக்குறுதிகள் செய்வதை யார் நம்பமுடியும்? மூன்று வருடங்களுக்கு முன் செய்த வாக்குறுதிகளெல்லாம் இப்போது எங்கே போய் விட்டது? சட்டசபையில், போக்குவரத்து வழிச்செலவு கூட வாங்கமாட்டோமென்று சொல்லிப்போன சுயராஜ்யக்கக்ஷிப் பிரபுக்கள், பொய்பில் கொடுத்து ஒன்று இரண்டாகப் பணம் வாங்குவதை நன்றாய்ப்பார்க்கிறோம். இதைப்பற்றியாராவது கேட்டால், ஐயோபாவம்! பிழைத்துப்போகட்டுமே, அவருக்கு இதைத்தவிர வேறு வழி என்ன, வென்று சொல்லி மழுப்பிவிடுகிறார்கள். இப்படியிருக்க, இவர்கள். வாக்குத்தத்தத்தை வேகமாய் ஓடுகிற தண்ணீரில் தான் எழுதிவைக்கவேண்டும். பொய்ச்சத்தியம் செய்கிறவர்கள், இனிமேல் பொய்ச்சத்தியம் செய்வதில்லையென்று ஓர் புதுச்சத்தியம் செய்தால், அது பழையசத்தியத் தோடு சேருவதற்கு எத்தனை நாள் ஆகும். அல்லாமலும் தேர்தல்களுக்காகச்செய்யும் சத்தியங்களில் குற்றம் கண்டுபிடிக்கக்கூடாதென்கிற "காங்கிரஸ் மநு தர்மசாஸ்திரம்" சொல்லுகிறது. அப்படியிருக்க இவைகளினாலெல்லாம் என்ன காரியம் ஆகிவிடும்; தற்காலம் மந்திரிபதவியை வகிக்கும் பிராமணரல்லாதார் செல்வாக்கை எப்படியாவது ஒழித்து, அதைப்பிராமணாதிக்கத்துக்கு உட்படுத்த வேண்டுமென்பதே நமது பிராமணர்களின் முக்கிய தத்துவமாகப் போய்விட்டது என்பதை நான் நெருப்பின்மேல் நின்று சொல்லவும் தயங்கேன். அம்மாதிரி செய்வதற்கும் அவர்களுக்கு பாத்தியமுண்டு என்பதையும் நான் ஒருக்காலும் மறுக்க மாட்டேன். ஆனால், அதற்காகக் காங்கிரஸின் பெயரையும், மகாத்மாவின் பெயரையும், தேசத்திற்காகத் தியாகம் செய்தகஷ்டப்பட்ட—தேசபக்தர்களின் செய்கையின் பலனையும் உபயோகப்படுத்திக் கொள்வதைத் தான் விபசாரத்தனத்தைக் காட்டிலும், இழிவான காரியமென்பதை சொல்லி இவ்வியாசத்தை முடிக்கிறேன்.

---

## சதியாலோசனை.

தேசிய பிராமணர்களென்போரும், தேசியப்பிராமணப்பத்திரிக்கைகளென்பதுவும் பிராமணரல்லாதாரை எவ்விதத்தில் அடக்கியாள்வது என்னும் விஷயமாய் பெரிய சதியாலோசனைகள் செய்து, பிராமணரல்லாதார் செலவிலும், பிராமணரல்லாதார் உழைப்பிலும், தங்கள் காரியத்தை நடத்தி வருகிறது. பிராமணரல்லாதார்களில், பாமரஜனங்களும் (தங்களது அறியாமையினாலும்,] சோற்றுப்பிரசாரகர்களும், இவர்களுக்கனுகூலமாயிருந்து தங்கள் சமூகத்தின் சுயமரியாதையையே பாழாக்கி வருகின்றார்கள். தன்னுடைய சாமர்த்தியத்தினால், பிராமணரல்லாதாரில் பெரும்பாலோர் தன்னை நம்பும்படி செய்து, அவர்களுக்குத் தலைவருமாகி அச்செல்வாக்கால் மகாத்மாவின் பிரதம சிஷ்யராகி, ஒரு நிலையான நல்ல பெயரை ஏற்படுத்திக்கொண்ட ஸ்ரீமான். சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் இப்பொழுது தமது சுயரூபத்தைக்காட்டத்துணிந்து விட்டார். ஒவ்வொரு நாளும், சட்டசபைத்தேர்தலுக்கு, சுயராஜ்யக்கக்ஷியாருக்கே வோட் செய்யுங்கள்; மதுவிலக்குச்செய்ய அவர்கள் ஒப்புக்கொண்டார்கள், என்று விளம்பரம் போட்டு வருகிறார். சுயராஜ்யக்கக்ஷியாரால் எப்படி மதுவிலக்குச்செய்யக்கூடும் என்பதைப்பற்றி. அநேக தடவைகளில் இவரே மறுத்துப்பேசியிருக்கிறார். சுயராஜ்யக்கக்ஷி காரியதரிசியாகிய, ஸ்ரீமான். சத்தியமூர்த்தியும் சுயராஜ்யக்கட்சியின் மூலம் மதுவிலக்குச்செய்ய முடியாதென்று சொல்லியிருக்கிறார். சுயராஜ்யக்கட்சியின் ஆதிக்கத்தால் காங்கிரஸ் காரியதரிசியாகிய, ஸ்ரீமான். ஏ. ரெங்கசாமி ஐயங்காரும் தமது பத்திரிகையின் மூலம் தினமும் சாராயம் விற்றுப் பணம் சம்பாதித்துக்கொண்டு தான் வருகிறார். கோயமுத்தூர் ஜில்லா சுயராஜ்யக்கட்சித்தலைவராகிய ஸ்ரீமான். சி. வி. வெங்கிட்டரமண ஐயங்காரோ, இன்னமும் தமது மரங்களில் கள்ளுற்பத்தி செய்வதன் மூலம் பணம் சம்பாதித்துக்கொண்டு தான் வருகிறார். சுயராஜ்யக்கட்சித் தலைவர்களுக்கோ, இன்னமும் மதுபானம் இல்லாவிட்டால் ஒரு காரியமும் செய்ய முடியாது.

இவ்வளவும் ஒருபுறமிருக்க, ஸ்ரீமான். இராஜகோபாலாச்சாரியாரே, சட்டசபைக்குப்போவதைப் பற்றிப் பேசுகையில், வெளியில் சட்டமறுப்பைச் செய்து, கள்ளை நிறுத்துவதென்றும், காசிக்குப் போக முடியாவிட்டால், சட்டசபைக்குள் போய் கள்ளைக்குடிக்க வேண்டுமென்று சட்டம் செய்வதற்கு அநுகூலமாயிருக்கிற சட்டசபையாகிய கள்ளுக்கடைக்குப் போவதா வென்று பேசியிருக்கிறார். இவ்வார்த்தை சொன்னதற்காக, இவர்பேரில், குற்றப்பத்திரிக்கைபடிப்பதற்கு ஒரு தீர்மானத்தை ஸ்ரீமான். சத்திய மூர்த்தி கொண்டுவந்து, ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் சட்டசபைக் கள்ளுக்கடையெனச்சொன்னது தப்பிதமென்றும் அளவுக்குமிஞ்சிக் கண்டித்து, காரியக்கமிட்டியில்

பேசியிருக்கிறார். இதை, ஸ்ரீமான்கள். எம். கே. ஆச்சாரியாரும், டி. ஆதிநாராயண செட்டியாரும் ஆதரித்து, வைது பேசினார்கள், அதுசமயம் ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கர் எதிர்த்து, சட்டசபையைப் பற்றி நிர்மாணத்திட்டங்களையும், விடுதலையையும், பொறுத்தவரையிலும் ஸ்ரீமான். இராஜகோபாலாச்சாரியார் சொன்னதுபோல், சட்டசபைகள் கள்ளுக்கடைகள் தாமென்றும் பேசித் தீர்மானத்தைத் தோற்கடித்தார்.

இப்படியெல்லாமிருக்க இப்பொழுது சட்டசபையில் கள்ளை ஒழிப்பதற்கு அநுகூலமிருக்கிறது; சென்றவருடம் கள்ளுக்கடையாயிருந்த சட்டசபையானது, இவ்வருடம் காசிக்குச் சமானமாகிவிட்டது; ஆதலால் மேல்கண்ட கள்ளு உற்பத்திக்காரரும், கள்ளு விற்பனைக்காரரும், கள்ளுக்குடிப்பவர்களும், கள்ளுக்குடிப்பவர்களினால் ஜீவனம் செய்பவர்களும், சட்டசபையால் கள்ளை நிறுத்த முடியாதென்கிற தீர்மானமுள்ளவர்களுமான, சுயராஜ்யக்கட்சியாருக்கே வோட் கொடுங்கள் என்று உபதேசம் செய்ய வந்துவிட்டார். இதையும் பிராமணப்பத்திரிக்கைகள் கரைகட்டி விளம்பரம் செய்கின்றன. இதில், எவ்வளவு சதியாலோசனைகள் இருக்கின்றதென்பதையும், பிராமணரல்லாதாரை ஒழிப்பதற்கு என்னவேண்டுமானாலும் செய்யலாமென்று இத்தேசிய பிராமணர்களும், அவர்கள் பத்திரிக்கைகளும் கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கின்றனவென்பதையும் பொது மக்கள் உணர்ந்து ஏமாந்து போகாமலிருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

---

(5-வது பக்கம் தொடர்ச்சி)

படி அநாவசியமாய் எவ்வளவோ செலவு தாங்குவதாயிருந்தாலும், நமது நாட்டுக்கும், நமது வகுப்பிற்கும் உழைப்பதாக முன் வந்த ஒரு தேச பாஷைப் பத்திரிகைக்கு சிறிது கொடுப்பது பாரமாயிருந்தால் தேசமும், நாமும் எப்படித்தான் கடைத்தேறுவோம்? இந்தக் காரணத்தைக் கொண்டோ, அடுத்த பிப்ரவரிமாதம் முதல் ஒன்றிற்கு பாதியாக திராவிடன் சந்தாவைக்குறைத்துவிட்டார்கள் இதற்காக தமிழர்கள் அப்பத்திரிகைச்சொந்தக்காரருக்கு மிகவும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். குறைந்த சந்தாவை ஈடுசெய்வது தமிழர் கடமை. சந்தாதாரர் ஒவ்வொருவரும் மற்றவர்களையும் சந்தாதாரராகச் சேரும்படிக் கட்டாயப்படுத்த வேண்டும். அப்படிச் சேர்ந்தாலல்லாமல் சந்தாக்குறைந்த பலனை தமிழர் அடைந்ததாகவாகிலும், குறைத்தபலனை நிர்வாகிகள் அடைந்ததாகவாகிலும் ஏற்படாது. சந்தாவைக்குறைத்ததானது, நமது தேசமக்களாகிய பிராமணரல்லாதார் எல்லாரும் பத்திரிகை படிக்க வேண்டுமென்கிற ஒரு மேலான நோக்கத்தோடல்லாமல் அதிகப்பேர்சேர்ந்து குறைந்த சந்தாவுக்கு பத்திரிகை எண்ணிக்கையை அதிகப்படுத்துவதால் வரக்கூடிய லாபத்தை உத்தேசித்தல்ல. ஒருவாரத்தில் எழுத்துக்களும் புதிப்பிக்கப்படும் என்று தெரிகிறது. ஆகையால் இனி ஒரு விநாடியும் தாமதமின்றி திராவிடனுக்கு சந்தாதாரராகச் சேரவேண்டும். இது நமது சுயமதிப்பைச் சோதிக்கச் சந்தர்ப்பம் வந்திருக்கிறது அது மட்டுமா? இந்த ஆண்டில் நமது தேசம் ஒரு பெரிய நாடகமேடையாக இருக்கும், இதில், பல வேஷதாரிகள் நடிக்கக் கூடும். கூத்தென்றால், ராஜவுமிருப்பான்; கோமாளியுமிருப்பான்; ராஜா வேடந்தரித்து நடித்தவர்கள், இனிமேல் கோமாளிவேஷமும் தரித்துவருவார்கள். கோமாளி வேஷதாரிகள், ராஜாவேடமும் தரித்துவரக் கூடும். வாக்காளர்களாகிய நாமோ கூத்துப்பார்த்துக் கொண்டிருக்கிறோம். நேரமோ நடுநிசி, இடமோ திரை மறைவு. கயிறோ சூட்சம், இச்சந்தர்ப்பத்தில ராஜாவையும், கோமாளியையும் கண்டுபிடிக்க வேண்டும். இதற்கு வேண்டியது ஞானக் கண்ணாடி. அக்கண்ணாடியை அடைய வழியென்ன? அதுதான் "திராவிடன்" "குடி அரசு" என்ற பத்திரிகைகளைப்படித்து உண்மையறிவது.

'காண்டீபன்'

வந்தேமாதரம்.

---

## பேடிப் போர்

நமது நாட்டில் பிராமணரல்லாதாருக்கு விரோதமாய் ஏற்பட்டிருக்கும் பலபத்திரிக்கைகளின் தலையெழுத்து உண்மையை எழுதி, வீரப்போர் நடத்த யோக்கியதையின்றி, பொய்யை எழுதி பேடிப்போர் நடத்தும்படியாக ஏற்பட்டுப்போய் விட்டது. உதாரணமாக, வட ஆற்காடு சட்டசபை உபதேர்தலைப்பற்றி, ஸ்ரீமான். வெங்கிட்டரங்கம் நாயுடுவுக்கு விரோதமாகவும், ஸ்ரீமான் பத்மநாப முதலியாருக்கு அநுகூலமாகவும் பிரசாரம் செய்யப்போவதாகவும், அதற்குக் காரணம், முன்னவர் "சுயராஜ்யக் கட்சி"யாரென்றும், பின்னவர், 'ஜஸ்டிஸ்" கக்ஷியாரென்றும், சொல்லிக்கொள்ளுவது தானென்றும் எழுதியிருக்கின்றன. இப்படியே இன்னும் அநேக பொய்யான விஷயங்களை எழுதியும், மெய்யான விஷயங்களை மறைத்தும் எழுதுவதை தமது தொழிலாகக் கொண்டிருக்கின்றன. சட்டசபைத் தத்துவத்தில், ஸ்ரீமான்கள். வெங்கிட்டரங்கம் நாயுடுவுக்கும், பத்மநாப முதலியாருக்கும், ஒருவித்தியாசத்தையும் கற்பிக்க இடமிருப்பதாக நாம் கருதவில்லை. ஸ்ரீமான். வெங்கிட்டரங்கம் நாயுடு சட்டசபைக்குச் செல்வதினால் நமக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமென்றோ, ஸ்ரீமான். பத்மநாப முதலியார் சட்டசபைக்குச் செல்லுவதில் பெரிய நன்மை விளைந்துவிடுமென்றோ, நாம் கருதவில்லை.

இதுவரையிலும் இதற்காக ஒருவருக்கனுகூலமாகவோ, மற்றொருவருக்குப்பிரதிகூலம் செய்யவோ நாம் எண்ணவுமில்லை அப்படி அனுகூலமாகவும் பிரதிகூலமாகவும் இவர்கள் தேர்தலில் பிரசாரம் செய்ய வேண்டியது இதுசமயம் அவசியமுமில்லை. யென்பதே நமது முடிவு. அவசியமென்று கருதினால் கட்சியையோ, சட்டத்தையோ, பழியையோ கருதி பயந்து கொண்டிருக்கப்போவதுமில்லை. ஸ்ரீமான் நாயுடுவையும் நமக்கு 6, 7, வருடங்களாகத் தெரியும். அவர் எவ்வளவு தான் பிராமணர்களோடு கட்டிப்புரண்டு திரிந்தாலும், அவருடைய அந்தரங்கமானது பிராமணரல்லாதார் விஷயத்தில் அநுதாபமாகவே தானிருப்பதை அறிந்திருக்கிறோம். இவ்வறிவுக்கு மாறுதல் ஏற்படுகிற காலத்தில் நமது கடமை என்னவென்பது நமக்கே தெரியும். ஸ்ரீமான். முதலியாரைப்பற்றி, நல்லவரென்றும், பரோபகார உழைப்பில் கொஞ்சக்காலமாக ஈடுபட்டவரென்றும் கேள்விப்பட்டதேயல்லாமல், நேரில் பார்த்ததே இல்லை.

அல்லாமலும், ஸ்ரீமான். முதலியாருக்கு விரோதமாயும், ஸ்ரீமான். நாயுடுவுக்கு அநுகூலமாகவும், சம்பத்தில் செய்யப்படுகிற தேர்தல் பிரசாரங்களிலும், பிரசாரகர்கள் ஸ்ரீமான். முதலியாரைப்பற்றி கண்ணியமாகவே பேசிவருவதாகவும் பத்திரிக்கைகளில் பார்க்கிறோம். ஆதலால், இவ்விருவர்களில், இது சமயம் உயர்வு தாழ்வு காண முடியவில்லை.

இப்படியிருக்கப் பிராமணப்பத்திரிக்கைகளும், பிராமண ஆதரவு பெற்ற பத்திரிக்கைகளும் இம்மாதிரியான பொய்களைப் பரப்பிவிடுவது பலனளிக்காதென்பதையும், இப்படிப்பட்ட காரியங்களினால் அவைகளின் யோக்கியதை இன்னும் அதிகமாக தாழ்த்தப்படுமென்பதையும் குறிப்பிடுகிறோம்.

---

## நாகை தேசபக்த சமாஜம்.

சென்ற 26-1-26 மாலை 6 மணிக்கு மேற்படி சமாஜப்புதுக்கட்டடத்தில் நடைபெற்ற சமாஜ அங்கத்தினர்களின் பொதுக்கூட்டத்தில் மேற்படி சமாஜ ஐந்தாம் ஆண்டு நிறைவு விழாவை, நாளது குரோதன-௵ மாசி-௴ 23, 24-௳ களுக்குச் சரியான 6, 7-3-26 சனி, ஞாயிறு தினங்களில் சென்னை தமிழ் நாடு ஆசிரியர் ஸ்ரீமான். வரதராஜலு நாயுடு அவர்கள் தலைமையின் கீழ் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டதென சமாஜ காரியதரிசி அறிவிக்கிறார்.

---

## தேசபந்து

தேசபந்து என்னும் ஒரு தமிழ் வாரப்பத்திரிக்கை நமது பார்வைக்கு வந்தது. அது சென்ற ஜனவரி ௴ முதலிருந்து சென்னையில் ஸ்ரீமான் கிருஷ்ணசாமிப்பாவலரை ஆசிரியராகக்கொண்டு வெளிவருகிறது. அதின் சந்தா வருஷம் 1 க்கு நாலு ரூபாய்

விலாசம்:—

தேசபந்து ஆபீஸ்,

சிந்தாத்திரிப்பேட்டை

மதராஸ்.

---

# தமிழர்களே விழிமின்!

சென்ற மீ 23-ந் தேதி "திராவிடன்" பத்திரிக்கை "மீண்டும் ஆச்சாரியார்" என்னும் தலைப்பில் எழுதுகிறதாவது:—

"மீண்டும் ஸ்ரீமான். இராசகோபாலாச்சாரியாருக்குப் பிராமண வெறிபிடித்துவிட்டது. ஆகையினாற்றான் சித்தூரில் அவர் வருந் தேர்தலில் எல்லோரும் சுயராஜ்யக்கட்சியாரை ஆதரிக்கவேண்டுமென்று பேசியிருக்கின்றார். தாம் பிராமணர், சுயராஜ்யக்கட்சியும் பிராமணக்கட்சி; ஆகையினால் எல்லோரும் சுயராஜ்யக்கட்சியை ஆதரிக்க வேண்டுமென்று ஆச்சாரியார் கூறுவரேல், நாம் ஒருசிறிதும் அவர் கூறுவதைப் பொருட்படுத்தமாட்டோம். ஆனால் ஸ்ரீமான். ஆச்சாரியார் காந்தியடிகளின் பெயரைக் கொண்டும், காங்கிரஸ் பெயரைக்கூறியும் ஒன்றுமறியாமக்களை ஏமாற்றப்புகுவதைநாம் கண்டிக்கின்றோம்.

முதலாவதாக ஆச்சாரியார் "நீங்கள் காங்கிரசுடன் நிற்கவேண்டும்; அல்லது முழுகிப்போய் விடவேண்டும்" என்று அறிவுறுத்துகின்றார். "காங்கிரஸ்" இருக்கின்றதா; அவ்வாறு இருப்பின் அஃது இப்பொழுது யாருக்கு அடிமையாய்ப் போய்விட்டதென்பதை நாம் அறிய விரும்புகின்றோம். காங்கிரசை பண்டித மோதிலால் நேருவுக்கு அடிமையாகி முழுகிப்போய்விட்ட பிற்பாடு ஆச்சாரியார், "காங்கிரசுடன் நில்லுங்கள்; அல்லது முழுகிவிடுங்கள்' என்று சொல்லுவது வேடிக்கையாய் இருக்கின்றது. காங்கிரசில் இப்போது யார் இருக்கின்றார்கள்? காந்தியடிகள் "நான் இன்னும் ஓர் ஆண்டு மட்டும் வெளியே கிளம்பமாட்டேன்" என்று கூறிவிட்டார்; ஜின்னா விலகிக்கொண்டார், டாக்டர் மூஞ்சி மறைந்துவிட்டார், கேல்கர் வெளியேறிவிட்டார்; ஜெயகர் காங்கிரசிலுள்ள எலும்பையும் துண்டுதுண்டாய் உடைக்க வெளிக்கிளம்பிவிட்டார். பம்பாய்ச் சட்டசபை அங்கத்தலைவர்களோ காங்கிரசைத் தமக்கு அடிமைப்படுத்திக்கொண்ட மோதிலால் நேருவைச் சண்டைக்கு இழுக்கின்றார்கள். ஸ்ரீமான். விபினசந்திரபாலர் சொல்லியிருப்பதுபோன்று நம் மாகாணத்திலோ ஐயர், ஐயங்கார்கள் தவிர காங்கிரசில் வேறு எவரும் இலர். இனி லாலா அவர்களைத் தலைமையாய்க்கொண்ட இந்துமகா சபையோரோ, காங்கிரசுக்கு எதிரிடையாக வரும் தேர்தலில் தம்பிரதிநிதிகளை நிறுத்தப் பார்க்கின்றார்கள். எனவே முழுகிப்போன காங்கிரசுடன் நம் மக்களையும் முழுகிப் போகச் சொல்வது தான் அறிவுடைமையோ?

காஞ்சிமாநகரிலும்கூட சட்டசபையில் தமக்கு நம்பிக்கையில்லை; காங்கிரசையும் சுயராஜ்யக்கட்சியையும் ஒன்று படுத்தக்கூடாதென்ற நம் ஆச்சாரியாருக்கு இப்பொழுதேன் திடீரென சட்டசபை வெறி பிடித்ததென்பதை ஒவ்வொருவரும் நோக்குதல் வேண்டும். சுயராஜ்யக்கட்சி பிராமணக்கட்சி ஆகலான், ஆச்சாரியார் அதைக் கொண்டு பிராமணரல்லாதார் கட்சியை ஒழிக்க ஆச்சாரியார் விரும்புகின்றார். இனி ஆச்சாரியார் சுயராஜ்யக் கட்சியை ஆதரிக்க வேண்டுமென்பதற்கு மற்றொரு காரணத்தையும் கூறி ஏமாற்றுகின்றார். இதுதான் பெருத்த மோசமாகும். ஸ்ரீமான் ஆச்சாரியார்,

"சுயராஜ்யக் கட்சியார் குடி நிறுத்தலை மேற்கொள்ளுவர் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு."

என்று கூறுகின்றார். குடி நிறுத்தலைக்குறித்து ஆச்சாரியாருக்கும் புரசவாக்கம் ஸ்ரீமான். சத்தியமூர்த்திக்கும் நடந்த எழுத்துச்சண்டையை நாம் இன்னும் மறந்தோமல்லோம். நண்பர்களும் மறந்தனரல்லர். சின்னாட்களுக்கு முன்னர் ஆச்சாரியார் பத்திரிகைகளில் குடியை நிறுத்த முற்படுவோருக்கே வோட்டுக் கொடுக்க வேண்டுமென்று எழுதினார். இது கடற்கரை வாயாடிநம் வேளாளர் தெரு சத்தியமூர்த்திக்கு உடனே பெருஞ்சீற்றத்தை உண்டாக்கிவிட்டது. விடவே, அவர் "ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் மந்திரியாய் வந்தாலும் இரட்டை ஆட்சியுள்ள மட்டும் குடியை ஒழிக்கமுடியாது. அவ்வாறு ஒழிக்க முற்பட்டாலும் இந்திய அரசாங்கத்தார் இடங்கொடுக்கமாட்டார்கள் என்று விடை அறைந்தார்" ஆகவே எப்படி சுயராஜ்யக்கட்சியார் குடியை முற்றும்ஒழிப்பார்களோ? இனிச்சுயராஜ்யக்கட்சியார் நிரம்பியுள்ள பம்பாய் கார்ப்பரேஷனில்

"முனிசிபல் கட்டிடத்தைச்
சார்ந்த எப்பகுதியிலும் நடை
பெறும் விருந்துகளில் விஸ்கி
ஒயின் முதலிய எத்தகைய குடி
களும் குடிக்கக்கூடாது"

என்று சென்ற மாதத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் தோற்றுப்போகவில்லையா என்று நாம் வினவுகின்றோம். கட்டிடத்துக்குள் குடிக்கக்கூடாதென்ற தீர்மானமே தோற்றுப்போனால் குடியை முற்றும் ஒழிக்க இக்கட்சியார் எவ்வாறு பாடுபடுவார்களோ ஆச்சாரியார் அவர்களே சொல்லவேண்டும். மற்றும் ஒருகால்சேலாய் ஹோட்டலில் நடைபெற்ற விருந்தில் பண்டிதமோதிலால் நேரு உட்பட்ட பல சுயராஜ்யக்கட்சியார் புட்டி புட்டியாய் உடைத்ததைப்பத்திரிகைவாயிலான் நம் ஆச்சாரியார் படித்துமிருக்கலாம். அம்மட்டோ! இம்மாகாண சுயராஜ்யக்கட்சியின் தலைவர்கள் ஒருசிலருக்கு குடியாமற்போயின் இரவில் உறக்கம் வாராதென்பதை ஆச்சாரியார் கண்டும், அல்லது பிறர்வாயிலான் அறிந்தும் இருக்கலாம். இத்தகையோரைக் குடியை நிறுத்தப்பாடுபடுவார் என்பது, நஞ்சு நிரம்பிய ஓர் பாம்பை நல்ல பாம்பென்று முத்தமிடுவதையொக்கும்.

சுருங்கக்கூறுங்கால் ஆச்சாரியாருக்கு எப்பொழுதும் உள்ள பிராமணவெறி கிளம்பிவிட்டது. பிராமணரல்லாதார் கட்சியைக் காங்கிரஸ் என்ற போர்வையைப்போர்த்திக்கொண்டு அழிக்கவேண்டுமென்று முடிவு செய்துகொண்டார். அதற்காகத்தான் காங்கிரசை ஆதரியுங்கள், ஆதரியுங்கள் என்று ஆச்சாரியார் ஏமாற்றுகிறார். பிராமணரல்லாதாரே எச்சரிக்கை! எச்சரிக்கை!

## சுசீந்திரம் சத்தியாக்கிரகம்

1. சுசீந்திரம் சத்தியாக்கிரக கமிட்டியார் 26—1—26-ல் கோட்டார் டாக்டர். எம். ஈ. நாயுடு வீட்டில் ஓர் கூட்டம் கூட்டினார்கள். ஸ்ரீமான். பி. சுப்பிரமணிய ஐயர் தலைமை வகித்தார்.

2. கீழ்கண்ட கனவான்கள் அதிகப்படியாகச் சத்தியாக்கிரக கமிட்டி மெம்பர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஸ்ரீமான்கள். | பாக்கை, என். சாமிநாத பிள்ளை, கோட்டார். வி. முத்துக்கருப்ப பிள்ளை, நாகர் கோவில் ஏ. சத்தியவாகீஸ்வர ஐயர், ஆர். எம். சிவதாணு செட்டியார், வடிவீஸ்வரம் எஸ். நடராஜ ஐயர், தோக்கல் புதூர் எஸ். மங்கல பெருமாள் பிள்ளை, காகன்புத்தூர் எம். சுப்பிரமணிய பிள்ளை, சுசீந்திரம் எஸ். செல்லம், கோட்டார், எஸ். சொக்கலிங்கம் மூப்பனார், வ. சிதம்பரம் செட்டியார், கடுக்காரை திருச்சிற்றம்பலம் பிள்ளை முதலியவர்கள்.

3. சத்தியாக்கிரகம் செய்யவென்று வரும் வாலண்டியர்களுக்கு போர்டிங் ஒன்று ஸ்தாபனம் செய்யத்தீர்மானிக்கப்பட்டது.

4. ஷை போர்டை நிர்வாகக்கமிட்டியார் வசம் ஒப்புவிக்கப்பட்டது.

5 & 6. தை-மீ 16-ந் தேதி சத்தியாக்கிரகம் ஆரம்பிப்பதென்றும், இதை காரியதரிசியானவர் கவர்ன்மெண்டுக்கும், பொது ஜனங்களுக்கும், பத்திரிகைகளுக்கும் அறிவிக்குமாறும் தீர்மானம் செய்யப்பட்டது.

சத்தியாக்கிரகம் ஆரம்பிப்பதெனத் தீர்மானிக்கப்பட்ட தை மீ 16-ந் தேதியன்று (29 1-26) 20 வாலண்டியர்கள், கதர் உடையும், காந்தி குல்லாவும் தரித்து, தேசியக்கொடி தாங்கினவர்களாய், பஜனைசெய்துகொண்டு சத்தியாக்கிரகம் செய்யப் புறப்பட்டனர். தாழ்ந்த வகுப்பாருக்கு விடுதலையும்—சமத்வமும் அளிக்கவேண்டுமென அர்த்தம் கொடுக்கக் கூடிய பாடல்களை தொண்டர்கள் பாடும்போது மனதை இளக்கிற்று.

குறிப்பிட்ட ஸ்தானினருகே வந்ததும், சில கிழவர்களும், பெரும்பான்மையான மாணவர்களும் வாலண்டியர்கள் செல்வதைத் தடுத்தனர். வாலண்டியர்களின் தலைவர் சத்தியாக்கிரக உடைதரித்திருந்ததார் (கதர் உடை) அவர் மேல் குலத்தவராயிருந்தும், அத்தெருவழியே போகலாகாதெனத் தடுக்கப்பட்டார். பின் திரளான ஜனங்கள் சேர்ந்துவிட வாலண்டியர்கள் செல்லமுடியவில்லை. இவர்களைத் தடுத்தவர்கள் வாலண்டியர்களைத் தாறுமாறாய்த் திட்டினர். என்றாலும், தொண்டர்கள் தங்கள் தலைவர்கள் உத்திரவுப்படியே அகிம்சாதர்மத்தில் நின்றனர்.

சத்தியாக்கிரக ஆச்ரமம் ஓர் தோப்பில் ரமணீயமான இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. சமையலில் வித்தியாசமே இல்லை. பார்ப்பானும்-பறையனெனக் கூறப்படுபவனும் ஒன்றே. போஜனத்திலும் வித்தியாசம் இல்லை. போஜனம் முற்றிலும் மரக்கறி பதார்த்தங்களே என சத்தியாக்கிரக ஆச்ரமம் விளம்பரசபை அதிகாரிதெரிவிக்கிறார். ——



## உண்மையான கதர்.
## கெட்டியான கதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர்போர்டாரின் உதவியாலும், மேற்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடன் நடைபெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

காங்கிரஸ அத்தாடச்ப் பத்திரம்

ஸ்ரீகாந்தி கதராலயத்தார் கைநூலால், கைத்தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

வா. மு. தங்கப்பெருமாள்,
காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி.

ந. ராமசாமி,
மானேஜர், ஸ்ரீகாந்தி கதராலயம்,
திருப்பூர்.

வந்தேமாதரம்.

## கரூர் சுயம் கத்தர் ஜவுளிகள்.

தமிழ் நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளை பீஸ்கள். ஷர்டிங், கோட்டிங், சால்வைதினுசுகள் கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்

S. ராமசாமி அய்யர்,
ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர்ஸ் கரூர்.

அத்தாட்சிப்பத்திரம்

(தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால் கைத்தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்,
காரியதரிசிகத்தர், இலாகா.

## நவ இந்தியா.

தேசமுன்னேற்றத்துக்கென உழைக்கும் ஓர் வாரப்பத்திரிகை. ஆசிரியர்.
ஸ்ரீமான். டி. எஸ். தியாகராஜ ஞானியார்.
வருட சந்தா ரூ. **5.**
மானேஜர், நவ இந்தியா,
திருவாரூர், S. I Ry.

## ஓர் மஹானின் மகிமை.

"அருமையான மூலிகையும் ரகசியமும்."
குஷ்டம், க்ஷயம், முதல் சகலவித வியாதிகளும், செய்வினைகளும் நீங்கியும், புத்திர பாக்கியம் உண்டாகியும் அபாரமான எக்காரியங்களும் கோரியபடி முடிந்தும், ஏராளமான நற்சாக்ஷிகளும் சங்கத்தில் தங்கமேடலும் பெற்றவை.
எதற்காக தேவையானாலும் பதிலுக்கு ஸ்டாம்பு வைத்து கோயமுத்தூர் ஜில்லா மேட்டுப்பாளையம் பாலச்சந்திரன் ஆபீஸ் தலைவர், ஸ்ரீமான். எஸ். ஏ. கே. பிள்ளையவர்களுக்குவிபரமாக எழுதிக் கொள்வீர்களானால் சகலவிபரமும் புஸ்தகமும் கிடைக்கும்.

## "தேசோபகாரி"

பர்மாவில் விடுதலை முழக்கஞ் செய்துவரும் ஓர் தமிழ் வாரப்பத்திரிகை.
வருஷ சந்தா ரூபாய் ஐந்து.
மானேஜர்:— "தேசோபகாரி" லிமிடெட்,
45-36வது வீதி. ரங்கூன்.

## "தேசபக்தன்"

ஓர் தேசீயத்தமிழ் பத்திரிகை.
பிரதி திங்கள், புதன், வெள்ளிதோறும் வெளிவருவது. விளம்பரத்திற் கேற்றது.
வருடசந்தா ரூபாய் 13.
வெளிநாடுகளுக்கு ரூபாய் 16.
காரியஸ்தர்,
"தேசபக்தன்" கொழும்பு.

## "தெய்வீகன்."

பார்க்கவகுல முன்னேற்றத்தை நாடியுழைக்கும் ஓர் மாத சஞ்சிகை.
பார்க்கவர்கட்கு வருட சந்தா ரூ. **2-0-0**
ஏனையோர்கட்கு வருட சந்தா ரூ. **1-8-0**
காரியஸ்தர். "தெய்வீகன்"
பொன்மலை, திருச்சி.

வெள்ளியை கொடுத்து தங்கத்தைப் பெறுங்கள்.
வந்தாலும் போனாலும் சரி என்ற லாட்டரி இல்லை.
கைமேல் பலன் கிடைக்கும்
இது ஏமாற்றமில்லை.
பட்ட பகல் போல் வெட்ட வெளிச்சமானது
ஒரு ரூபாய் வெள்ளி நாணயமாகக் கொடுத்தால் 32

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

பெறலாம்.

அதனை உபயோகித்தவர்கள் அது "தங்கத்திற்குச் சமமான நிறையுள்ளதென்று" கூறியிருக்கின்றனர். மனத்திலும், தேகத்திலுமுள்ள கோளாறுகளைப் போக்கடித்துப் பலஹீனம் அஜீரணம் முதலிய வியாதிகளை சாஸ்தமாக கண்டிக்கின்றது.

விபரம் வேண்டுவோர் இன்றே கிரையஜாப்தாவுக்கு எழுதுங்கள்.

ஆதங்க நிக்ஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே மதராஸ்.

## 100-வது காலண்டர் இனும்.

1004 உபதேசம் ரூ. 2–0–0, சச்சிதானந்த சிவம் ரூ. 1–2–0, மோடிசாதனம் ரூ. 4–0–0, ஜாதக அலங்காரஉரை ரூ. 2–0–0, ஞானக்கோர்வை ரூ. 1–8–0, பட்டினத்தார் உரை ரூ. 2–0–0, கந்தரநுபூதி ரூ. 0–8–0, சஷ்டிஉரை ரூ. 0–8–0, கந்தர் அந்தாதிஉரை ரூ. 0–12–0, திருமுருகாற்றுப்படை உரை ரூ. 0–12–0.

சாதுரத்ன சற்குரு புத்தகசாலை,
பார்க்டவுன், (கு) சென்னை.

## டைமண்ட்-பிரஸ், ஈரோடு

எங்கள் அச்சாபீசில் தமிழ், இங்கிலீஷ் பாஷைகளில் நேர்த்தியான கலர் வேலைகள் அவரவர் இஷ்டப்படி குறைந்த சார்ஜுக்கு குறித்த காலத்தில் அச்சடித்துக் கொடுக்கப்படும்.

K. N. பெரியசாமி நாயுடு,
புரோப்ரைட்டர்.

## முக்கிய கவனிப்பு.
## 18 காரட்டு ரோல்டு கோல்டு பிளேட் கேஸ் ரிஸ்லெட் கெடியாரங்கள்.



குடிஅரசு சந்தாதாரர்களுக்கு மாத்திரம் இக்குறைந்த விலையும், உயர்ந்த பவுண்டன் பேனாவும், புதிய 1926 வருத்திய அழகிய காலண்டரும் ஆர்டருக்கு இனாமாகப் பார்சலுடன் அனுப்பப்படும். சீக்கிரம் முந்துங்கள். இது நன்றாய் உழைக்கக் கூடியது. சரியான காலம்காட்டக்கூடியது. இதுபோன்ற கெடியாரங்கள் இனிவாய்ப்பதரிது. குறைந்தவிலையுள்ளது! சீக்கிரம் முந்துங்கள்!

நெ. 1, 22 காரட்டு ரோல்ட்கோல்ட் பிளேட் 5-வருஷ காரண்டியுள்ள ரிஸ்லெட் கெடியாரம் 12—0—0
நெ. 2 பொன் கில்ட் ரிஸ்லெட் கெடியாரம் தோல்பட்டையுடன் விலை 7—0—0
நெ. 3 22 காரட்டு ரோல்ட் கோல்ட் 5-வருஷ காரண்டி 15 கெம்புகள் செதுக்கிய லீவர் பாக்கட் கெடியாரம் உயர்ந்த சங்கிலியுடன் விலை ரூ. 15—0—0
விலாசம்:— நயாகரா வாட்ச் கம்பெனி தபால்பெட்டி நெ. 130, மதராஸ்

ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.